495

495

# நபி முஹம்மத்

(ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்)

## (14-6-35. மீலாத் ஷரீப்)

1407-வது பிறந்த தினக் கொண்டாட்டத்திற்காக

ஏர்வாடி 6-வது தெரு

மீலாத் ஷரீப் கமிட்டியாரால்,

வினியோகிக்கப்பட்டது.

தூத்துக்குடி,

அய்யனார் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1935.

Q7:458
N35
77015

# நபி முஹம்மத்

(ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்)

## (14-6-35. மீலாத் ஷரீப்)

1407-வது பிறந்த தினக் கொண்டாட்டத்திற்காக

ஏர்வாடி 6-வது தெரு
மீலாத் ஷரீப் கமிட்டியாரால்,
வினியோகிக்கப்பட்டது.

---

தூத்துக்குடி,
அய்யனார் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

---

1935.

# முகவுரை.

சகோதரர்களே!

உலகத்திய எல்லா வகுப்பினருக்கும் தயாளமாக அவதரித்துள்ள நமது நபிகள் பெருமான் முஹம்மத் முஸ்தபா ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களின் பிறந்த தின வைபவத்தை யொட்டி அவர்களின் சரித்திரச் சுருக்கத்தை பல நூல்களிலிருந்து சேகரித்து இதில் தரப்பட்டிருக்கிறது. பொதுவாக நமது இதர மத சகோதரர்கள் இஸ்லாத்தையும் அதன் திரு நபி அவர்களையும்பற்றி சமீப காலம்வரை அதிகம் அறிந்துகொள்வதற்கு அவகாசமில்லாமலே இருந்து வந்ததென்பதும் சென்ற சில வருஷ காலமாக கௌரவமான வழியில் அவ்விஷயம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறதென்பதும் நண்பர்கள் அறிந்த விஷயமேயாகும். சாதாரணமாக வருஷத்திற்கொருமுறை வெளியிடப்படும் மீலாத் பிரசுரங்களை பெற்றுக்கொண்ட ஜனங்கள் அதைபடித்து விஷயம் தெரிந்துகொள்ளாமல் போக்கடித்து விடுவது மிக வருந்தத்தக்கது. அப்படியில்லாமல் இந்நூலையடையப்பெற்ற ஒவ்வொரு முஸ்லிம் சகோதரரும் இதை நன்ருய் படித்துணர்ந்து மாசில்லா புனித நபியவர்களின் நியதியை பின்பற்றி ஒழுகிவருவதோடு, இதரமத சகோதரர்களின் பார்வைக்கும் இந்நூலை எட்டச் செய்வீர்களானுல் இதனை அச்சிட்ட பலனை நான் அடைந்தவனுவேன்.

ஏ. மு. கா. மு.

**முஹம்மது முஹியியிதீன் லெப்பை,**

வியாபாரம்,

14—6—35. தூத்துக்குடி & ஏர்வாடி.

பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

# நபி முஹம்மத்

## ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்:

ஆண்டவனை புகழ்ந்து அவனது திருத் தூதர் மீது ஸலவாத்துக் கூறுகிறோம்

மனிதர்களின் கரங்கள் செய்துவிட்டகாரணத்தினல் நிலத்தின் மீதும் நீரின் மீதும் புரட்சி வெளியாய்விட்டது. (குர்ஆன் 30-41)

இத்தரணிக்கு, இதன் மரணத்தின் பின் ஆண்டவன் உயிரை கொடுக்கிருன் என்று தெரிந்துகொள்ளக்கடவீர்கள். (குர்ஆன் 26-17)

உலகில் தர்மம் நீங்கி அதர்மம் ஓங்கி மக்கள் மாக்களாய் அஞ்ஞான அந்தகாரத்துள் ஆழ்ந்து, உழலுங்கால் அத்தகையோரை நேரான பாதையில் சீராக நடாத்துதல்பொருட்டு எல்லாம் வல்ல இறைவன் அந்தந்தக்காலங்களில் தன் தூதர்களை இவ்வனியின்கண் அவதரிக்கச்செய்தான் என்பது முஸ்லிம்களின் தீர்க்கமான நம்பிக்கையாகும்:—

இற்றைக்கு சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்னுள்ள இவ்வுலக நிலைமையை உற்று நோக்குவோமாயின் அக்கால மக்களின் வழக்க ஒழுக்கங்களும் ஆன்ம வாழ்க்கையின் அமைப்புகளும் அடியுடன் அழிந்து கிடந்தனவென்றே கூறலாம். உலகத்தின் சகல கோணங்களிலும் சுக்ஞான மென்பது அறவே மறக்கப்பட்டு அஞ்ஞானமே அதிகம் தாண்டவமாடிற்று.

அந்தந்தக்காலங்களில் தோன்றிய மதாச்சாரியர்கள் மக்களுக்கு வேண்டிய நீதி நெறிகளேயும் தெய்வ நம்பிக்கையையும் புகட்டுவதற்கே தங்கள் ஆயுள்களை அர்ப்பணம் செய்து சென்றிருக்க, பிற்கால மக்கள் அத்தகைய நன்னெறிகளை பின்பற்றுவதற்கு மாற்றமாய் அந்தந்த ஆச்சார்ய புருஷர்களையே தங்களுக்குரிய தெய்வமாய் சமைத்து பூஜிக்கலாயினர். மக்கள் தங்களைசிருஷ்டித்த கர்த்தாவை வணங்குவதற்குப் பகரமாய் அவனது சிருஷ்டிப்பொருள்களானசந்திரன் சூரியன் மரம்மட்டை கல் மண் சர்ப்பம் போன்றவைகளை எல்லாம் வழிபடலாயினர். மதுபானமும் வியபிசாரமும் மதங்களின் பேரால், பகிரங்கமாகவே அனுஷ்டிக்கப்பட்டன. இத்தகைய நிலைமையில் அரப் நாடே தலைசிறந்து விளங்கியது. அந்நாட்டு மக்கள் மனிதத்தன்மையற்ற காட்டுமிராண்டிகளே போன்று காலங்கடத்தி வந்தார்கள். ஒற்றுமையென்பது ஒரு சிறிதுமின்றி பற்பல கூட்டத்தினராய் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள். கொலையும் கொள்ளையும் அவர்களின் சர்வசாதாரண பழக்கங்களாகவே காணப்பட்டன. பலதாரமணங்களுக்கும் விவாஹ விலக்குகளுக்கும் எல்லையிருந்ததில்லை. தந்தை இறந்து விட்டால் தனயர்கள் தந்தையின் மறுதாரங்களையும் தங்கள் மனைவிகளாய் கொண்டு வாழ்ந்தார்கள். பெண்குழந்தைகள் பிறப்பதே, அவமானமாகக் கருதப்பட்டு அவைகள் உயிருடன் மண்ணில் புதைக்கப்பட்டன. ஆங்கிருந்த விக்ரஹ வணக்கமேபோன்று உலகசரித்திரத்தில் எங்கும் எப்பொழுதும் கண்டுகொள்ள முடியாது.

மக்காவின்கண் பரிசுத்த கஃபாவிலேயே சுமார் 360 விக்ரஹங்கள் வைக்கப்பட்டு தினமொன்றுக்கு ஒரு விக்ரஹமாய் பூஜிக்கப்பட்டதென சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடு

கின்றனர். அவ்விக்ரஹங்களுக்கு நரபலிகளும் இடப்பட்டன வாம். (நமது நபிகள் பிரானின் பாட்டனாரான அப்துல் முத்த லிப் அவர்கள் தங்கள் குடும்ப க்ஷேமத்திற்காக நரபலியிடுவ தாய் நேர்ச்சை செய்திருந்தார்கள். அதை நிறைவேற்றுவ தற்கு தனது 12 குமாரர்களையும் அழைத்துச் சென்று யாரை பலியிடுவதென ஒவ்வொரு பெயருக்கும் சீட்டு எழுதி எடுக்கச்செய்தார்கள். நமது நாயகத்தின் பிதாவான அப் துல்லா அவர்களை பலியிடும்படி சீட்டு விழுந்தது. அதைக் கண்டு தங்கள் வீட்டு பெண்கள் எல்லாம் அழுது புலம்பி அப்துல்லாஹ் அவர்களுக்குப் பதில் ஒட்டகை பலியிடவேண் டுமென கெஞ்சி கேட்டுக் கொண்டார்கள். அவ்வாறே, ஒரு சீட்டில் அப்துல்லாஹ் அவர்கள் பெயரும் மற்றொரு சீட்டில் 10 ஒட்டகங்களும் குறிப்பிட்டு சீட்டு எடுக்கப்பட்டது. அப் பொழுது அப்துல்லாஹ் அவர்கள் பெயரே விழுந்தது. பின் னர் 20 ஒட்டகங்கள் 30,40 இவ்வாறு 100 ஒட்டகங்கள் வரை சீட்டு எழுதிப்போட்டு பார்த்து வந்ததில் கடேசியாக 100 ஒட்டகத்தின் பெயரில் சீட்டு விழுந்தது. அவ்வாறே ஒட்ட கங்கள் பலியிடப்பட்டன.) பிரயாண காலங்களிலும்கூட அக் கால அரபிகள் தங்களுடன் விக்ரஹங்களை சுமந்து செல்வார் கள் என்பதும் விக்ரஹங்களில்லாவிட்டால் அடுப்புக் கல் ஒன் றை தங்கள் விக்ரஹமாய் சமைத்துக்கொள்வார்கள் என்பதும், அவர்களின் வழக்கமாய் இருந்து வந்தது. அக்கால நடப் பைப்பற்றி கிரிஸ்தவ பிஷப் ஸர் வில்லியம்மூர் கூறுவதாவது:

"பிறகு நமது கவனத்தை ஈர்க்கக்கூடிய முதன்மையான சிறப்பு யாதெனில் ஒரே தன்மையனவான கண்ணியத்துக் கும் ஒழுக்கத்துக்கும் கட்டுப்பட்டு ஒரே தன்மையனவான பழக்க வழக்கங்களையும் அநுஷ்டித்துக்கொண்டு பெரும்பா

னும் ஒரே தன்மையனவான பாஷையையும் பேசிக்கொண்டு ஆனால் ஒவ்வொருவரும் மற்றவரினின்றும் யதேச்சையா யிருந்து கொண்டு அந்த அராபியர் எண்ணிறந்த சாகைகளாக பிளவுபட்டு கிடந்ததுதான். ஓரிடத்தில் அமைதியுடன் நில் லாமலும் அடிக்கடி தங்களுடன் யுத்தம் புரிந்துகொண்டு மிருப்பார்கள். உதிரக் கலப்பை கொண்டேனும் அல்லது வேறு சம்பந்தத்தைக் கொண்டேனும் ஒன்று சேர்ந்திருக் கும் மனிதர்களும் ஓர் அற்ப காரணத்தைக் கொண்டே தமக் குள் பிளவுபட்டு உடனே ஜன்ம விரோதிகளாய் மாறி விடுவ தற்கு எப்பொழுதும் அவர்கள் ஆயத்தமாயிருப்பார்கள். இவ் வாறாகத்தான் இஸ்லாத்தின் உதய காலத்தில் அவ்வரப் தேசத்தின் பண்டை சரித்திரம் இருந்து வந்தது. அதாவது சித்ர தரிசனியில் அடிக்கடி வெவ்வேறுவிதமான தோற்றங் கள் காணப்படுவதே போல் அதற்குமுன் அவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து பிணைப்பதற்காக செய்யப்பட்டு வந்த எல்லா விதமான முயற்சிகளும் வீணாகவே போய் முடிவடையுமாறு தகர்த்துக்கொண்டு அன்னவரின் நிலைமையானது சதா மாறு பாடடையக்கூடிய முறையில் அடிக்கடி சேர்ந்துகொண்டும் பிரிந்துகொண்டுமிருந்து வந்தது. எந்த விதமான சக்தியைக் கொண்டு இந்தக் கூட்டத்தினர் அடக்கி ஆளப்படுதல் அல் லது ஒரே மத்தியத்தின் பக்கல் இழுக்கப்படுதல் கூடுமென் னும் விஷயமாய் இனித்தான் பைசல் செய்யப்படவேண்டிய தாயிருந்தது.

அந்த விதமான பைசல்தான் முஹம்ம(ஸல்)தால் செய் யப்பட்டது."

எனவே உலகம் இத்தகைய அனாச்சாரத்தின் உச்ச நிலையை அடைந்து அல்லோல கல்லோலப்பட்டு அவதியுறும்

போது அதன் உஜ்ஜீவிப்பின் பொருட்டு ஒரு பொது தீர்க்க தரிசி அவதரிக்க வேண்டியது அவசியமாயிருந்தது—

அரேபியாவில் மக்கமா நகரம் குரைஷியர்கள் என்ற கோத்திரத்தின் அதிகாரத்திலிருந்து வந்தது. அவர்கள்தான் ஆங்குள்ள கோத்திரங்களுள் சிறந்தவர்களென மதிக்கப்பட்டு வந்தனர். அக்கோத்திரத்திலுதித்த அப்துல்முத்தலிப் என்பவர் சற்குண சீலராய் சீரும் சிறப்பும் பெற்று செல்வாக்குடன் இருந்து வந்தார். அன்னவரின் பன்னிரு குமாரர்களுள் ஐந்தாவது குமாரராகிய அப்துல்லா மிக ரூபலாவண்யமுள்ள புருஷராவர். அவர்களது அழகைக் கண்ட பெண் மணிகள் பலர் அன்னாரை தமது நாயகராய் வரித்துக்கொள்ள ஆவல் பூண்டனரென்பர். அப்படிப்பட்ட அப்துல்லாஹ்வுக்கு இருபத்தி நான்கு வயதானபோது குரைஷி வர்க்கத்தாரைப் போன்ற பெருமதிப்பு வாய்ந்த ஜொஹ்ரா வென்னும் கோத்திரத்துக்கு தலைவரான வஹப்பின் அப்துல் மனுபின் செல்வக் குமாரியாம் "ஆமினு உடன் திருமணம் நடைபெற்றது. இஃது நடைபெற்ற மறு வருஷம் அவ்வரப் நாட்டில் பல சம்பவங்கள் நிகழ்ந்தன. அவற்றுள் அப்ரஹாவின் படை எடுப்பு, குறிப்பிடத் தக்கதொன்றாகும். அப்ரஹா வென்னும் கிரிஸ்தவ மன்னர் தனது ஸன்ஆ வென்னும் நகரில் கிரிஸ்தவ பிரசார நோக்கத்துடன் தேவாலயமொன்று கட்டி முடித்து அராபியர்கள் வருடமொரு முறை கஃபத்துல்லாவில் கூடுவதை நிறுத்தி, அந்த மாதா கோவிலிலேயே கூடவேண்டுமென உத்திரவு பிறப்பித்தார்—ஆனல் அந்த அராபியர்கள் அவ்வுத்திரவை மதியாததால் கோபமுண்ட அப்ரஹா கஃபத்துல்லாவையே இடித்து தகர்த்து எறிய வேண்டி மக்காவின் மீது படை எடுத்து வந்தார். அவரது சேனை கஃபாவை

நெருங்கு முன்னர் தேவகோபத்தால் கொள்ளை நோய் அச் சேனை முழுதும் பரவி நாசமாக்கிற்று. அப்ரஹாவும் அத ற்கு இரையாயினர்.

இது திரு குர்ஆன் ஷரீபில் "அலம்தர கைப" என்ற சூராவில் ஆண்டவன் திருவுளம் செய்திருக்கிறுன்.

இவ்வாறு இறைவன் பரிசுத்த கஃபாவை காப்பாற்றி ஞன். இச்சம்பவம் நபி பெருமான் அவதார சம்பந்தமாய் நடந்தேறிய தீர்க்க தரிசனங்களுள் ஒன்றென சரித்திராசிரி யர்கள் குறிப்பிடுகின்றனர். இதுசமயம் நபிகள் பிரான் கர்ப் பத்தில் இருக்கிறுர்கள்.

அப்ரஹாவின் படை எடுப்புக்குப் பின்னர் அப்துல்லாஹ் அவர்கள் ஷாம் தேசத்திற்கு சென்று திரும்பி வரும்போது மதீனத்தில் நோய் வாய் பட்டு அங்கேயே காலகதியால் தேக வியோகமானுர்கள். அன்னவர்கள் காலஞ்சென்ற சில தினங் களில் ஆமினு அவர்களின் திரு உதரத்தினின்றும் நாயகம் (சல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் (கி. பி. 570, ஆகஸ்ட் ௴ 29-வ) யானை ஆண்டு ரபீவுல் அவ்வல் பிறை 12 திங்கட்கிழமை விடி வெள்ளி முளைப்பதற்கு சில விஞடிகள் முன்னர் திரு அவதாரம் புரிந்தார்கள். நபிகள் பெருமான் பிறப்பின் சிறப்பைக்குறித்து உமர்ப் புலவர் அப்பா அவர்கள் சொல்லியிருப்பதாவது:—

கோதறபழுத்து மதுரமேகனிந்த கொவ்வை வாய்ரம்பையர்வாழ்த்தி
தீதற நெருங்கி யேவல் செய்திருப்ப செழுங் கமலாசனத்திருந்த
மாதருக்கரசி ஆமினு உதர மனையிடத்திருந்து மானிலத்தில்
ஆதாம் பெருக நல்வழி பொருளாம் அஹமது தோற்றினரன்றே.

அப்பரிசுத்த குழந்தைக்கு பாட்டனர் அப்துல்முத்தலிப் அவர்கள் முஹம்மத் (புகழப்பட்டவர்) எனவும் தாயார் ஆமினு அவர்கள் 'அஹ்மத்' (புகழ்பவர்) என்றும் நாமகரணமிட்டனர். ஆமினு அம்மாள் அவர்கள் தங்கள்அருந் துணைவர் பரகதி யடைந்த துக்கத்தால் பீடிக்கப்பட்டிருந்தார்களாதலின் தங்களருங்குழந்தைக்கு அமுதூட்டுவது அரிதாய்விட்டது அஃதல்லாது அக்காலத்தில் தாய்மார்கள் பாலூட்டாது குழந் தைகளை போஷகத் தாய்களிடமே ஒப்படைத்துவிடுவது வழக்கமாதலின் குழந்தை முகம்மத்(ஸல்) அவர்களை "தாயிப்" பகுதியை சேர்ந்த ஹலீமா என்ற மாதரிடம் ஒப்படைக்கப் பட்டது. தரித்திரத்தால் வாடி வதங்கிய ஹலீமா இக்குழந் தையை ஏற்றுக்கொண்டதுனிமித்தம் அன்னவர்களுக்கு க்ஷேம காலம் தோன்றியதென்றும், அவர்களின் கால் நடை களும் கொழுத்து வளர்ந்து அபரிமிதமான பால் கறந்தன வென்றும் சரித்திராசிரியர்கள் வரைகின்றனர்.

இவ்வாறு ஹலீமா அவர்களின் இல்லத்தில் வளர்ந்து வந்த, முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆறு வயதடைந்தபோது அன்னவர்களை ஹலீமா மக்காவிற்கழைத்துச்சென்று, ஆமினு அவர்களிடம் ஒப்புக் கொடுத்தார்கள் ஆனல் முஹம்மத்(ஸல்) தன் மாதாவின் பாதுகாப்பில் அதிக நாள் இருக்க கொடுத்து வைக்கவில்லை. ஏனெனில் அந்த அம்மாளவர்கள் தமதருமை புதல்வருடன் தம் கணவரின் சமாதியை தரிசிப்பதற்காக புறப்பட்டுச் சென்று தரிசித்து வரும்போது 'அபவா' என்னு மிடத்தில் தேகவியோகமாய் விட்டார்கள். எனவே முஹம் மத்(ஸல்) அவர்கள் தாயும் தந்தையும் இழந்த அனுதைச் சிறுவ ரானுர்கள். என்னே! ஆண்டவனின் திருவுளச் சித்தம் இருந்தவாறு! பெற்றோர்களைப் பறிகொடுத்த பாலர் முஹம் மத்(ஸல்) அவர்களைப் பாட்டனர் அப்துல் முத்தலிப் மிக

பக்ஷமாய் வளர்த்து வந்தார்கள். ஆனால் அவர்கள் எட்டு வயதடைந்தபோது பாட்டனாரவர்களும் பரமபதம் அடைந்து விட்டமையால் பெருமானாரின் பெரிய தந்தையாம் அபூத் தாலிபவர்கள் தமது அந்திய காலம் வரை அளவற்ற அன்பும் அபிமானத்துடனும் தமது தம்பியின் மைந்தரை போற்றி பாதுகாத்து வந்தார்கள்.

நபி பெருமானாரவர்களை அபூதாலிப் அவர்கள் பெற்றோரினும் பேரன்பு பூண்டு வளர்த்து வந்தார்களெனினும் அன்னவர்களை பள்ளிக்கூடத்திற்கனுப்பி வைத்தார்களில்லை. எனவே, முஹம்மத்(ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் அந்நாட்டு வழக்கப்படி மற்ற சிறுவர்களுடன் ஒட்டகங்களையும், ஆடுகளையும் மேய்ப்பதிலேயே ஈடுபட்டார்கள். பால பருவத்திற்குரிய விளையாட்டில் அவர்கள் கவனம் அறவே செல்லவில்லை. அச் சின்னஞ்சிறு பிராயத்திலும் ஆண்டவனுடைய சிந்தனையும் இயற்கையின் பொலிவுகளுமே அன்னவர்களுக்கு அதிகம் சந்துஷ்டியை அளித்து வந்தன. எனவே மேய்ச்சல் நேரங்களிலும் கூட, விளையாட்டிலும் வீண் கேளிக்கைகளிலும் ஈடுபட்ட சிறுவர்களை விட்டும் பிரிந்து, பரம்பொருளைப்பற்றிய, சிந்தனையிலாழ்ந்து, அப் பேரானந்தத்தையே பருகி வந்தார்கள். தம் நாட்டு மக்கள் ஏக தெய்வ கொள்கையை விட்டும் நெடுந் தூரத்திற் சென்று மிக கொடிய விக்ரஹத் தொழும்பில் ஈடுபட்டு ஒற்றுமையற்றவர்களாய் அல்லலுறும் அலங்கோல நிலைமையே, அன்னவர்களின் ஹிருதயத்தை, பெரிதும் புண்படுத்திவந்தது. அதற்குரிய பரிகாரத்தை இறைவன் காட்டி விடமாட்டானா? என்பதுவே அவர்களின் ஆர்வமாயிருந்து வந்தது. முஹம்மத் (ஸல்) பன்னிரு பிராயத்தை அடைந்த போது பெரிய தந்தையார் அபூதாலிப் அவர்களுடன் முதன்

முறையாக, ஷாம் தேசத்திற்கு வியாபாரத்தினிமித்தம் சென்றார்கள். அந்த முதற் பிரயாணமே, மிக்க லாபகரமாய் முடிவடைந்தது. அதுமுதல் அவர்கள் வர்த்தகத்துறையிலும் அழகிய பயிற்சிபெற்று வந்தார்கள். அத்துடன் இளமை முதல் அவர்கள் ஒழுக்கத்தின் உறைவிடமாகவும் சத்திய சொரூபராகவும் அன்பின் அணிகலனுயும் இரக்கச்சித்தமும் யோக்கியப்பொறுப்பும் பெருந்தகையும் பேரன்பும் நம்பிக்கையும் நாணயமும் இன்னோன்ன உத்தமோத்தம குணங்கள் நிறைந்த சற்குண சம்பன்னராயிருந்தார்கள். பொய்மையொழித்து மெய்மையை போற்றி வந்தார்கள். இனிய மொழி பேசுவதிலும் இணையற்றவர்களாய் காணப்பட்டார்கள். எனவே இன்னவர்களை ஒப்பாரும் மிக்காரும் அந்நாட்டில் வேறெவருமிருந்ததில்லை. அதன் காரணமாகவே, கிடைத்தற்கரிய **"அல் அமீன்"** (நம்பிக்கைக்குரியவர்) என்ற அழகிய, பட்டமும் அந்நாட்டு மக்களால் அவர்களுக்கு சூட்டப்பட்டது.

மக்காவில் ஷாம் எமன் முதலிய தூர தேசங்களுடன் வியாபாரம் செய்து வந்த வர்த்தகர்களுள் "குவைலித்" என்பாரின் புத்திரியாகிய **கதீஜா** என்னும் பெருமாட்டியார் ஒருவராவர். மக்காவினின்றும் வெளி தேசங்களுடன் நடைபெறும் வர்த்தகத்தில் ஒரு பாதி, இச் சீமாட்டியாருடையதெனின் அவர்களின் வர்த்தகப் பெருக்கத்தை ஒருவாறு உணர்ந்துகொள்ளுதல் முடியும், இம்மாதரசியாருக்கு தமது வியாபாரத்தை வெளியூர்களுக்கு சென்று நடத்த நம்பிக்கைக்குரிய காரியஸ்தரொருவர் ஆவசியகப்பட்டார். அதுகாலை, நபி பெருமானரின் சௌலப்ய குணங்களைப் பற்றியும் நம்பிக்கையின் நேர்மையைப்பற்றியும் அவ்வனிதாரத்தினம்

அதிகம் கேள்வியுற்றிருந்தார்களாதலின் நம் அல் அமீன் அவர்களையே தங்களின் ஏஜண்டாய் அமைத்துக்கொண்டார்கள். 25 வயதடைந்திருந்த நபிகளுதர் (ஸல்) அவ்வுத்தியோகத்தை ஏற்றுக்கொண்டு, சிரியாவுக்குச் சென்று மற்றெவருக்கும் கிட்டாத, அத்துணை பெரு லாபத்துடனே சரக்குகளை எல்லாம் விற்பனை செய்து அது சம்பந்தமான கணக்குகளை ஸ்ரீமாட்டி கதீஜா அவர்களிடம் ஒப்புக்கொடுத்தார்கள். அவர்களின் வர்த்தக விற்பன்னமும், யோக்கியப் பொறுப்பும் அப்பெருமாட்டியார் பூண்டுள்ள, நம்பிக்கை விசுவாசத்தை அதிகப்படுத்தின. எனவே தம்முடைய ஐசுவரியங்களுக்கு பாதுகாவலராய் அவர்களையே அடைந்துவிட வேண்டுமென்ற எண்ணம் அம்மாது சிரோன்மணியின் மனதில் எழுந்தது. அவ்வெண்ணத்தை நிறைவேற்றுவதற்கு கௌரவமானதும் ஆண்டவனுக்கு பொருத்தமானதுமான வழி அவர்களை திருமணம் செய்துகொள்வதே தகுந்தது என கண்டார்கள். அங்ஙனமே, உரிய காலத்தில் தம் எண்ணத்தை, முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு தூதர்கள் மூலம் தெரிவித்ததில் அன்னவர்களும் அதற்கு உடன்பட்டார்களாதலின் கதீஜா அவர்களின் மாளிகையிலேயே, நபிகள் பிரான் அவர்களுக்காக அவர்களின் பெரிய தந்தை அபூதாலிப் சிறிய தந்தை 'ஹம்ஜா' இன்னும் முக்கியஸ்தர் சிலர்களினதும் கதீஜா பிராட்டியாருக்காக அவர்களின் பெரிய தந்தையான நௌபலின் குமாரர் வரகாவும் இன்னும் பலாது முன்னிலையிலும் அத்திருமணம் மிக மங்களகரமாக நடந்தேறியது = அத்திருமணச் சபையில் அவ்விவாஹத்தை நிறைவேற்றி வைத்த அபூதாலிப் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சமாவது:—

"நம்மையும் பனூஹாஷிமையும் இப்ராஹீம் நபி வம்சத்தாரையும் படைத்து பரிசுத்த விடுதியாகிய கஃபாவுக்கு நம்மையே பாதுகாவலராக அமைத்து பரிசுத்த பூமிக்கு தலைவராகவும் செங்கோல் ஓச்சுபவராகவும் அராபியர்களுக்கு தலைவராகவும் செய்துவைத்த புகழ் யாவும் அல்லாஹ்வுக்கே உரியதாகுக. இங்கு உங்கள் முன் அப்துல்லாஹ்வின் குமாரராகிய எனது சகோதரர் புத்திரர் முஹம்மத் நிற்கிறார். இவருக் இணையானவர் இத்தரணியில் வேறு யாருமில்லை. இவரை ஒப்பாரும் மிக்காரும் வேறு யாருமில்லை. மேல்குலம் பெருந்தன்மை தாராள சித்தம் உயரிய ஞானம் முதலியவற்றில் இவருக்கு நிகர் இங்காருமில்லை. இவரை ஒரு ஏழை என மதிக்க வேண்டாம். செல்வமென்பது இன்றைக்கு இருந்து நாளையே சென்றுவிடும். எனவே ஐசுவரியத்தினால் மட்டும் ஒருவரும் பெரிய மனிதராய்விட முடியாது எனவே இப்பொழுது முஹம்மத்(ஸல்) பின் அப்துல்லாஹ்வின் மனமானது கண்ணியமிக்க கதீஜாவின் பக்கல் நாடுகின்றது. இவ்வாறே, இம்மாதரசியின் மனமும் அவ்வாலிபர் பக்கலே நாடுகின்றது. எனவே ஓ வரகாபின் நௌபல்! இவ்வேளையில் இவ் வாலிபர் உம்மிடம் வேண்டுதல் புரிவதாவது, நீர் உமது சகோதரியாம் கதீஜாவை நிக்காஹ் வென்னும் முகூர்த்தம் செய்துகொடுப்பீராக. இதற்கு மஹராக 500 தங்க திர்ஹங்களை, இவ்விளைஞர் கொண்டுவந்திருக்கிறார்.

ஓ என் குறைஷி சகோதரர்களே? இதற்கு நீங்கள் சாக்ஷியாயிருப்பீர்களாக:—

விவாஹத்திற்குப்பின் நபிகள்பிரானும் கதீஜா பிராட்டியாரும் மிக்க அன்யோன்யமாயிருந்து வந்தார்கள். கதீஜா

நாயகி அவர்கள் தங்கள் செல்வமனைத்தையும் நபிகள்பிரான் சுதந்திரத்திற்கே முற்றிலும் விட்டுவிட்டார்கள்.

இங்ஙனம் நபிபெருமானாரவர்கள் தமது தருமை மனைவியார் தம் இஷ்டத்திற்கே விட்டுவிட்ட பொருள்களை தான தருமங்களில் செலவிட்டுக்கொண்டு தம் நாட்டு மக்கள் பூண்டொழுகும் அசத்திய நெறியை ஒழித்து சத்தியத்தை புகட்டும் நன்னெறியை அறிய பெரிதும் ஆவலுள்ளவர்களாயிருந்து வந்தார்கள். இதற்காக இவர்கள் மக்காவை விட்டும் நெடுந்தூரம் தன்னந்தனியே சென்று ஆண்டவனை நோக்கி அதிகம் தவம் புரிந்துவந்தார்கள். அப்படிப்பட்ட அகோர தவத்திற்கு, மக்காவினின்றும் சுமார் 3-மைல் தூரத்தில் ஹிரா வென்னும் குன்றிலிருந்த இயற்கைக் குகையொன்றை மற்ற இடங்களை விட ஏற்ற இடமாய் தேர்ந்தெடுத்தார்கள். அந்த ஏகாந்தமான குகையிலேயே நம் பெருமானாரவர்கள் தங்களுக்குரிய யோகநிஷ்டையிலாழ்ந்திருப்பார்கள். சிலசமயங்களில் தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை உடன் கொண்டு சென்று பன்னாட்கள் மக்காவிற்கு திரும்பாமலே அந்த அரிய தவத்துள் ஆழ்ந்துவிடுவார்கள்.

அத்தகைய காலங்களில் அப்பெருமானாருக்கு மெய்யான உவம தரிசனங்கள் தோன்றியும் அசரீரி வாக்குகள் கேட்டும் வந்தன. இங்ஙனம் அவர்கள் ஹிரா குகையில் தியானத்திலாழ்ந்திருந்த ஒரு நாள் வானத்தினின்றும் ஒரு ஜோதி, தங்களை நோக்கி வருவதாய் தோன்றியது. அஜ்ஜோதி மயமாய் தோன்றிய ஜிப்ரயீல் என்னும் நாமூஸே, அக்பர் நபி முஹம்மத் (ஸல்) அவர்களை நோக்கி, "ஓதுவீராக" என்றார் நபிகள் பெருமான் (ஸல்) நான் ஓதியவனல்லன், என விடை பகர்ந்

தார்கள். அப்பொழுதந்தவானவர் அவர்களை இறுகத் தழுவி மறுமுறையும் "ஓதுவீராக" என்றார். அப்பொழுதும் தெரியாதென்றார்கள். திரும்பவும் அவர்களை இறுகத் தழுவினர். இவ்வாறு மும்முறை தழுவிய பின்னர் கீழ்வரும் ஐந்து ஆயத்துகளை ஓதினர்.

(1) ஓதுவீராக. படைத்த உமது ரப்பின் திருநாமத்தை கொண்டு

(2) மனிதனை உதிரக்கட்டியினின்றும் படைத்தான்.

(3) ஓதுவீராக. மேலும் உமது ரப், மகா கண்யமுள்ளவனாக இருக்கிறான்.

(4) எழுதுகோலைக்கொண்டு கற்பித்தவன்.

(5) மனிதனுக்கு அவன் அறியாமலிருந்ததை அறிவித்தவன். குர்ஆன். (96. 1-5)

மேற்கண்ட ஆண்டவனின் திருவசனங்கள் நபிகளாரின் ஹிருதயத்தில் நன்குபதிந்துவிட்டன. அந்த அமரரும் மறைந்துவிட்டார். இச் சம்பவம் நிகழ்வுற்றது றம்லான் 27-ம் தேதி இரவென்று குறிப்பிடுகின்றனர். அதுவே மாட்சிமை மிக்க லைலதுல்கதர் என்று நந்திருமறை விளம்புகின்றது. இப்பொழுது எம்பெருமானார் தங்களது 40-வது பிராயத்தை எட்டியவர்களாயிருந்தார்கள். சென்ற பல வருடங்களாக அல்லும் பகலும் தேடியலைந்த சுத்த சத்திய சன்மார்க்கம் அந்நபி அவர்களுக்கு அப்பொழுதுதான் வெளிபட்டது. அத்தகைய வஹீ (ஞான வெளிபாடு) யால் அதிகம் நடுக்கமுற்ற நபிகளார் தங்களில்லத்திற்கு திரும்பினார்கள். தேவ ஒளி நிறம்பி நடுங்கிக்கொண்டிருந்த தங்கள் திரேகத்தை

நன்றாய் போர்த்திவைக்கும்படி தம் மனைவியார் கதீஜா பெருமாட்டியாரிடம் கூறினார்கள். இதைக் கேட்டு கவலையுற்ற அப்பிராட்டியார் தம் நாயகரை அங்ஙனமே போர்வையால் போர்த்தி அதிக ஆவலுடன் நோக்கிக்கொண்டிருந்தார்கள். சிறிது பொழுதில் அந் நடுக்கத்தைவிட்டும் தெளிவடைந்த நம் பெருமானார் (ஸல்) ஹிரா குகையில் நடைபெற்ற சம்பவத்தை ஆதியோடந்தமாய் எடுத்தோதினார்கள். இதைக் கேட்ட கதீஜா நாயகி தம் பிராண நாதருக்கு ஆறுதல் மொழி கூறி ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் தங்களை ஒருபோதும் ஆண்டவன் கைவிடமாட்டான் தாங்களோ சத்தியவந்தராயும் கிருபையுள்ளவராயும் இருக்கிறீர்கள். எனதுயிருக்குரியவன் எவனோ அவன்மீது பிரமாணமாக தாங்கள் ஒரு தீர்க்கதரிசி என்பதில் சற்றும் ஐயமில்லை என உறுதிமொழி கூறினார்கள். அத்துடன் பண்டைய மதங்களின் ஆராய்ச்சியில் சிறந்த தன் பெரிய தந்தையின் மைந்தரான வரகாபின் நௌபல் என்பவரிடம் நபிபெருமானாரவர்களை அழைத்துச்சென்று ஹிரா குகையில் நடந்த சம்பவத்தை கூறினார்கள். இதைக்கேட்டு முடிந்த வரகா பரிசுத்தம்! பரிசுத்தம்!! நிச்சயமாக இவர்தான் மூஸாவுக்கும் ஈசாவுக்கும் வஹி கொண்டுவந்த நாமூஸெ அக்பர் முஹம்மத் இவ்வுலகிற்கு ஒரு பெரிய நபி ஆவார். இது விஷயத்தில் இவர் அதிக தைரியமாயிருத்தல்வேண்டும் என்று கூறியதும் கதீஜா பிராட்டியார் நபிகள் பெருமான் மீது நன்னம்பிக்கை கொண்டு முதன் முதலில் இஸ்லாத்தை தழுவினார்கள். எனவே இம்மாதரசியாரே முதல் முஸ்லிமாவர். அதன் பின் நபிகள்பிரான் தன்னந்தனியே தபஸ்புரிவதோடு நில்லாது எல்லோருக்கும் ஆண்டவனின் சத்திய நெறியை எடுத்தோத வேண்டுமென்றும் அதனாலேற்படும் இடையூறுகளை சகிக்க

வும் துணிந்துவிட்டார்கள். இவ்விதம் சிலமாதம் கழிந்ததும் முன்போலவே நபிமுஹம்மத் (ஸல்) அவர்களுக்கு ஒருவித அயர்ச்சி காணப்பட்டது. மறுபடியும் அந்த தேவதூதர் தோன்றி கீழ்காணும் வஹீயை அறிவித்தார்.

'எபோர்த்துக்கொண்டிருப்பவரே எழுந்திரும். அச்ச மூட்டி எச்சரிக்கை செய்வீராக. உம்முடைய ரப்பை, பெருமை, படுத்துவீராக. வழக்கம்போல் உம்முடைய ஆடையை, பரி சுத்தமாக வைத்துக்கொள்வீராக. அசுசியை வெறுத்துவிடு வீராக. (குர்ஆன்) 74-1-5)

மேற்கண்ட வஹி (ஞானவெளிபாடு) நபிபெருமானு ரின் இஸ்லாமிய பிரசாரத்திற்கு தூண்டுகோலாயிருந்தது. ஸ்ரீமாட்டி கதீஜா நாயகிக்கு பின்னர் ஆண்களில் முதன் முத லாய் எட்டு வயதுடைய அலி (ரலி) அவர்களும் அதன் பின் னர் அபூபக்கர் (ரலி) அவர்களும் நபிகள்பிரான் மீது நன்னம் பிக்கை கொண்டு இஸ்லாத்தை தழுவினர்கள். அப்பால் அபூ பக்கர் (ரலி) அவர்கள் தங்களுக்கு தெரிந்தவர்களிடையே இஸ்லாத்தைப்பற்றி எடுத்து கூறிவந்தார்கள். நபிகள் பிரா னின் இத்தகைய இரகசிய பிரசாரம் சுமார் மூன்று வருடங் கள் நடைபெற்றது. அக்காலத்தில் சன்மார்க்கத்தை ஏற்றுக் கொண்டவர்களின் தொகை நாற்பதுக்கு அதிகமில்லை. நான் காவதாண்டில் "உமக்கு அறிவிக்கப்படுவதை பகிரங்கமாய் வெளிப்படுத்துவீராக. மேலும் இணை வைப்பவர்களை விட்டு விலகியிருப்பீராக. உமக்கு சமீபமாயுள்ள உறவின் முறை யார்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக". என்ற தேவ கட்டளை கிடைக்கவும் நபிகள் பெருமான் (ஸல்) தங்கள் இரகசிய பிரசாரத்தை நிறுத்தி பகிரங்க பிரசாரத்தை ஆரம்பித்து

விட்டார்கள். உண்மையான நாயனை வணங்கும்படியும் பாபச்செயல்களை விட்டு விலகும்படியும் நபிகள்பிரான் செய்த உபதேசம் குறைஷியர்களுக்கு அதிக ஆத்திரத்தை உண்டு பண்ணியது.

ஒரு தினம் நபிகள்பிரான் சபா என்ற மக்காவின் அருகிலுள்ள குன்றின் பக்கத்தில் குறைஷியர்களை ஒன்றுகூடச் செய்து அக்குன்றின்மீது தாங்கள் ஏறி நின்றுகொண்டு "ஓ குறைஷி சகோதரர்களே! இந்தக்குன்றின் பின்புறமாக உங்களை தாக்குவதற்கு சேனையொன்று ஆயத்தமாகிக்கொண்டு வருகிறதென்று நான் சொன்னால் அதை நீங்கள் நம்புவீர்களா? என்று வினவினார்கள். அதற்கு குறைஷியர்கள் ஒரே குரலாக ஆம் நம்புவோம். ஏனென்றால் எப்பொழுதும் நீங்கள் உண்மையையே பேசுவீர்கள் என்று விடையிறுத்தார்கள். உடனே பெருமானாரவர்கள் அப்படி ஆனால் நீங்கள் ஆண்டவன் மீது மெய்யான நன்னம்பிக்கை கொள்ளவில்லையாயின் உங்கள்மீது கடுமையான துன்பம் வந்து இறங்குமென்று உங்களுக்கு நான் எச்சரிக்கை செய்கிறேன், என்று கூறினார்கள். அதைக் கேட்டதும் குறைஷியர்கள் எல்லோருக்கும் கடுங்கோபம் பிறந்துபிட்டது. நபிகள் பெருமானின் பெரிய தந்தையான அபூலஹப், நீ நாசமாகப் போகக்கடவாய். இதற்காகத்தானா! எங்களை இங்கு நீ கூட்டிவைத்தாய்! என்று கடுமையாகப் பேசினார். பின்னால் நபிகள் பிரானின் பிரசாரத்தை நடைபெறவொட்டாது தடுக்க குறைஷியர்கள் பல வழிகளில் முயன்று வந்தார்கள். நபிகள் பிரானும் தங்கள் பிரசாரத்தை நடத்திக்கொண்டு வருகிற காலத்தில் ஒரு தினம் சில முரடர்கள் அவர்களை தாக்க ஆரம்பித்தனர். அதைக் கண்ட ஹாரி திப்னு அபீஹாலா என்பவர் நபிகளுதரை

காப்பாற்ற முயன்றபோது எதிரிகளின் தாக்கினல் ஹாரித் உயிரிழக்க நேரிட்டது. இப்பெரியாரே தீனுல் இஸ்லாத்தின் தற்காப்புக்காக முதன் முதல் தமதாவியை அர்ப்பணம் செய்த உத்தமராவர் (இவரது ஆத்மா சாந்தி அடைவதாக).

நபிகள் பிரானுக்கு நாளுக்குநாள் குறைஷியர்களின் கொடுங்கோன்மை அதிகரிக்கலாயிற்று. சிறுவர்களேயும், காவாலிகளேயும் கிளப்பிவிட்டு நபிபெருமானருக்கு இன்னல்களும் இடையூறுகளும் விளேவிக்கலாயினர். அப்பெருமானர் ஒரு மாயக்காரர் என்றும் மந்திரவாதி என்றும், பல குடும்பங்களில் கலகத்தையும், தந்தை தனயர்களுக்கும் கணவன் மனேவியர்களுக்கும் அபிப்பிராய பேதத்தையும் உண்டு பண்ணக்கூடியவாக்கு வன்மையுள்ளவராதலால் அவர் சொல்வதை செவியேற்கலாகாதென்றும் வியாபார நிமித்தம் மக்கத்துள் பிரவேசிக்கும் மக்களிடம் எல்லாம் அம்மௌட்டியர்கள் துர் பிரசாரம் நடத்தலானர்கள். இதை உமர்புலவரவர்களும் தமது சீரு புராணத்தில் கீழ்கண்டபடி சொல்லியிருக்கிறார்கள்.

தாயை தந்தையை தன்னுயிராகிய
சேயை பெண்டிரை சிந்தையில் வேறதாய்.
பாயத்தோடும் பகைப்பிக்கவல்லதோர்-
மாயக்காரன் முஹம்மத் என்றோதுவார்.

ஆதி வேறுண்டொருவ னென்பானவன்
தூதன் யான் என சொல்லுவன் தெய்வங்கள்
பேதகம் பட பேசுவன் பேதியா
வேதமொன்று விளேந்தது காண் என்பான்.

அவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு எதிரிடைபுரிய எண்ணினர்களோ அவ்வளவுக்கவ்வளவு ஆண்டவனின் திருத்தூத

ரின் அழகிய பிரசாரத்தின் மகிமை அதிகம் ஜ்வலிக்கலாயிற்று நன்னம்பிக்கை கொண்டோரின் எண்ணமும் தினே தினே அதிகரித்தது:—

குறைஷியர்கள் தம் தம்பியின் புதல்வருக்கு இழைத்து வரும் இடுக்கங்களை சகியாத அபூதாலிப் அவர்கள் எம்பிரான் அவர்களிடம் குறைஷியர்கள் தம்மிடம் பயமுறுத்தி செல்வதை எடுத்து சொல்லி தீர்க்கமாக ஆலோசித்து பிரசாரத்தை நிறுத்திவிடுவது நலமென்று மிக பரிவுடன் கூறினார்கள். ஆண்டவனிடம் அசைக்கவொண்ணாத நம்பிக்கை வைத்து அவனது திருப்பணிக்கு தங்களை அர்ப்பணம் செய்து நிற்கும் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அபூதாலிப் அச்சமூட்டி எச்சரிக்கை செய்ததில் அதைரியப்படாமலும் அபூதாலிப் அவர்களின் தாக்ஷண்யத்திற்காக தங்களை குறைஷியர்கள் விட்டு வைத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்திருந்தும் மிக்க தீரத்துடன் எனதருமை பெரிய தந்தையரே! அல்லாஹ்வின் ஆணையாக என் பிரசாரத்தைவிட்டு விடும்பொருட்டு அவர்கள் என் வலக்கரத்தில் சூரியனையும் இடக்கரத்தில் சந்திரனையும் கொண்டுவந்து வைத்தபோதிலும் என் சத்திய பிரசாரத்தை நான் ஒருபோதும் நிறுத்திவிடமாட்டேன் என விடையளித்து, ஆண்டவனே! இக்காரியத்தில் என்னை நீ ஜயமடையச் செய்வாயாக. இன்றேல் இம்முயற்சியில் என்னை மடியச் செய்வாயாக என கண்ணீர்விட்டவர்களாய் அப்புறம்சென்று விட்டார்கள். எனினும் அபூதாலிப் அவர்கள் தம் தம்பியின் மைந்தர் கொண்டுள்ள துணிவை கண்ணுற்று அவர்களை திரும்பவும் அழைத்து அவர்கள் சித்தம்போல் நடந்துகொள்ளலாம் என்றும் தாம் ஒருபோதும் அவர்களை கைவிடபோவதில்லை என்றும் உறுதி கூறினார்கள்.

அபூதாலிப் அவர்கள் மூலம் அனுப்பிய தூது பயன் படாதது கண்ட குறைஷியர்கள் திரும்பவும் அபூதாலிப் அவர்களிடம் வந்து,

"தங்கள் வயதுக்கும் பெருந்தன்மைக்கும் அந்தஸ்துக் கும் நாங்கள் அளவு கடந்த மரியாதை வைத்திருக்கிறோம் ஆனல் எங்களுக்கு தொந்தரை செய்யாமல் தங்கள் தம்பி மைந்தரை தடுத்து வைக்குமாறு தங்களை வேண்டிக்கொண் டோம் தங்கள் தம்பி மைந்தர் நம்முடைய தெய்வங்களையும் தெய்வ நம்பிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்ற உபதேசம் அதிகமாக செய்துகொண்டு வருகிறார் அதை நாங் கள் சகிப்பதற்கில்லை. நாங்கள் தங்களை வேண்டிக்கொண்ட தற்கு தாங்கள் அவரை தடுத்ததாகவுமில்லை. ஆனதால் தாங் கள் ஒதுங்கிக்கொள்வீர்களாயின், நாங்கள் அவரை தொலைத்து விட வழி செய்வோம். எங்களுக்கு மத்தியில் நீர் முட்டுக்கட் டையாய் இருத்தல் கூடாது. அல்லது நீரும் அவருடனே பகிரங்கமாக சேர்ந்துகொண்டு நடு மைதானத்தில் வந்து எங் களுடனே யுத்தம் புரியத்தயாராக யிருக்கவேண்டும் நம்மிரு கக்ஷியாருள் ஒரு கக்ஷியார் ஒழிந்து போகுமட்டும் நாங்கள் செய்யப்போகும் யுத்தம் நிற்கப்போவதில்லை என்று ஆக்ரோ ஷமாக தெரிவித்து சென்றார்கள் அந்தப்படி அபூதாலிப் அவர் கள் தம் தம்பியின் மைந்தரை தங்களிடம் ஒப்புவித்து விடுவர் என்று குறைஷியர்கள் எதிர்பார்த்தனர். ஆனல், அபூதாலிப் அவர்கள் தம் தம்பியின் மைந்தரை கைவிடுவதில்லை என்று உறுதி கூறியதை கேள்வியுற்று அதிக ஏமாற்றமும் ஆச்சரி யமும் கொண்டுவிட்டனர்.

பின்னல் அவர்கள் நபிகள் பிரானை சகிக்கொண்ணு துன் பங்களிழைக்கத் தலைப்பட்டனர். நபிகள் பிரானை பின்பற்

றிய ஏழை முஸ்லிம்கள் எதிரிகளால் சித்திரவதை செய்யப் பட்டனர். சிலர் கொல்லப்பட்னர். காலில் கயிற்றை கட்டி தெருக்தெருவாய் இழுக்கப்பட்டனர். அராபிய பாலைவனப் பொட்டலில் சுடுமணலில் கிடத்தப்பட்டு நெஞ்சில் பாராங்கற் களை ஏற்றபட்டனர். இத்தகைய பளுவை ஏற்றும்போது அபூபக்கீஹ் (ரலி) என்னும் பக்தர் நெஞ்சுகூடு நசுங்கி நாவும் பிதுங்கி உயிர் நீத்தார்கள்.

பிலால் (ரலி) அவர்களை செய்த ஹிம்ஸை அளவிடற்கரி யது. உஷ்ண மணல் மீது மத்தியான வேளையில் ஆடையில் லாது கிடத்தி பசி தாகத்திற்கு ஒன்றும் கொடாது இரவு வரை தொந்தரை செய்வார்கள். இவ்விதம் பல நாள்வரை நடந்தது. சில சமயங்களில் பச்சை தோலைக்கொண்டு சரீ ரத்தை போர்த்தி தோல் துண்டு துண்டாகும்வரை இரும்பு கம்பியால் அடிப்பார்கள்.

குளிர்கால இரவுகளில் ஆடையில்லாது நடுத்தெருவில் நிறுத்திவைப்பார்கள். பனை நாரால் முறுக்கப்பட்ட கயிறு கொண்டு கழுத்தில்கட்டி தெருவில் இழுத்து செல்வார்கள் இவ்விதம் பல கஷ்டங்களுக்கு உள்ளாக்கிய போதிலும் பிலால் (ரலி) அவர்கள் உறுதியாக "அஹதுன்" "அஹதுன்" என்பதை அல்லாது வேறொன்றும் கூறமாட்டார்கள்.

கப்பாப் (ரலி) அவர்களை அக்கொடிய பாபிகள் அக்கி னியை வளர்த்து அந்த தணலின்மேல் அவர்களை மல்லாத்தி கிடத்தி அவர்கள் அப்பக்கம் இப்பக்கம் திரும்பமுடியாத விதத்தில் ஒருவன்னெஞ்சன் இவர்கள் மார்பில் காலைவைத்து மிதித்துக்கொண்டு நெருப்பின் வேகம் தணியுமட்டும் வைத்

துக்கொண்டிருந்தான்—அவர்கள் சரீரம் முதுகுபக்கம் வெந்து போயிருந்தது. அம்மார் (ரலி) அவர்களேயும் சுடுமணலில் கிடத்தி அவர்கள் நெஞ்சுமேலே இரும்பு மார்புக்கவசத்தை தூக்கிவைத்து சரீரத்தை வேகும்படி செய்தார்கள். யாஸிர் என்பவர்களின் இருகால்களேயும் இரு சங்கிலிகளால் பிணைத்து இரு ஒட்டகங்களின் கால்களில் கட்டி ஒட்டகங்கள் வெவ்வேறு திசை நோக்கி ஓடும்படி செய்ததில் யாஸிரின் உடம்பு இருபிளவாக கிழிந்து அந்தக்ஷணமே இறந்தார்கள். யாஸிரின் தாயார் அவர்கள் மார்பில் ஈட்டியால் சொருகி அவர்கள் ஆவியை அபூஜஹ்ல் போக்கினன்.

ஸுஹைப் (ரலி) அவர்களே புத்தி தடுமாறுமட்டும் அடிப்பார்கள் இவ்விதமே அபூபக்கீஹ் (ரலி) லுபைஞ (ரலி) ஜுனேரா நஹ்திய்யா உம்முஉபைஸ் என்ற பெண்மணிகளேயும் ஹிம்ஸைகள் செய்து ஜுனேரா என்ற பெண்மணிக்கு நேத்திரத்தையும் பழுதாக்கிவிட்டார்கள். இவ்வித கஷ்டங்களே அனுபவித்தும் இன்னவர்களது ஈமானில் ஒரு சிறிது தளர்வுமின்றி உறுதியாக இருந்துவந்தார்கள்.

இவ்வித கஷ்டத்திற்கு மத்தியில் மூன்று வருட காலங்களில் சுமார் 40 மனிதர்களே இஸ்லாத்தை தழுவியிருந்தார்கள். பிரார்த்தனே நடத்துவதற்கும் குர்ஆன் ஓதுவதற்கும் பாதையில்லாமலும் தோழர்களே இம்சித்து கொலே செய்வதையும் தவிர்ப்பதற்கு முடியாத தங்களது நிலேமையை நபிகள் பிரான் உணர்ந்து ரெம்பவும் மனம் துளங்கினர்கள். தோழர்கள் கஷ்டத்தை தாங்கள் ஏற்கவேண்டுமென்ற முடிவுசெய்து தோழர்களே கூட்டி நிலேமை தெளிவுபெறும்வரை செங்கடலின் மேற்குபகுதியிலுள்ள கிரிஸ்தவ ராஜ்யமாகிய அபிஸ்ஸீனி

யாவுக்கு குடியேறும்படி யோசனை கூறினார்கள். தங்கள் உயிரைவிட அருமையாய் மதித்திருக்கிற நபிகளுதரை விட்டு பிரிய தோழர்கள் மனம் வருந்தினாலும் தங்கள் ஞான குருவின் அறிவுரையை ஏற்றுக்கொள்ளுவது சிறந்த காரியமென கண்டு அவ்விதமே முதன்முதலில் ஹிஜ்ரி 5-ம் ஆண்டில் ஆண் பெண் உள்பட 15 முஸ்லிம்கள் (ஹபஷாவுக்கு) அபிசீனியாவுக்கு பிரயாணமானார்கள். துன்பத்திற்காக இவ்விதம் பிரயாணமான முஸ்லிம்களை அக் குப்பார்கள் சும்மாவிட்டுவிடவில்லை. அபிசீனியா மன்னருக்கு தூதனுப்பி குடியேறவிடாமல் தடுக்கமுயன்றார்கள். எங்கள் மதத்தையும் கிரிஸ்தவ மதத்தையும் நிராகரிக்கும் புது மதக்காரர்கள் அபிஸ்ஸீனியாவில் குடியேறவிடாமல் திரும்ப தங்களிடம் ஒப்படைக்க அவர்கள் வேண்டிக்கொண்டனர்.

தங்கள் மதத்திற்கு போட்டியாக வேருெரு மதம் வந்துவிட்ட தென்பதாக அந்நகரிலுள்ள கிரிஸ்தவபாதிரிகளும் குப்பார்களுக்கு சாதகமாக தங்கள் மன்னரிடம் தூது சென்றனர். எனினும் மன்னர் உண்மை உணர விருப்பங் கொண்டு முஸ்லிம்களை வரவழைத்து அவர்களில் தலைவரான ஜஃபர் அவர்களிடம் வினவியதாவது:—

நீங்கள் ஏன் மதத் துரோகிகளாக மாறிவிட்டீர்கள்? ஜஃபர் (ரவி) சொல்லியதாவது.

ஓ அரசர் பெருமானே! நாங்கள் மூடக் கொள்கைகள் நிறைந்த வர்க்கத்தில் தோன்றினோம். விக்ரஹ வணக்கமே எங்கள் தொழில் தானே மரித்த பிராணிகளை தின்று வந்தோம். நாங்கள் செய்த அக்கிரமங்களுக்கு அளவு இல்லை.

உற்ருர் உறவினர்களை துன்புறுத்தி வந்தோம். எங்கள் சமூகத்திற்குள்ளேயே பல அக்கிரமங்கள் நடத்தி வந்தோம். இப்படியிருக்க எங்கள் மத்தியில் ஒருவர் தோன்றினர். அவருடைய சிறப்பை நாங்கள் நன்கு உணர்ந்தோம். அவர் "இஸ்லாம் என்னும் மார்க்கத்தில் எங்களை அழைத்தார். விக்ரஹங்களுக்கும் மற்றும் இயற்கை பொருட்களுக்கும் வணக்கம் புரிவது கூடாதென்றும் சத்தியத்தையே பேச வேண்டுமென்றும் நம்பிக்கை துரோகம் ஒருபோதும் செய்யக்கூடாதென்றும் கொலை களவு முதலிவைகளை அறவே ஒழிக்கவேண்டுமென்றும் அநாதிகளின் ஐசுவரியங்களை அக்கிரமமாய் அபகரிக்கக்கூடாதென்றும் உற்ருர்உறவினர்களோடு சந்துஷ்டியாயும் அயலார்களிடம் சுமுகமாயும் நடந்துகொள்ளவேண்டுமென்றும் பதிவிரதைகளான பெண்மணிகள் மீது வீண்பழிகளை சுமத்தக்கூடாதென்றும் தினமும் ஆண்டவனை தொழவேண்டுமென்றும் நோம்பு நோற்கவேண்டுமென்றும், 'ஜக்காத்'தென்னும் ஏழை விகிதத்தை கொடுக்கவேண்டுமென்றும் எங்களுக்கு உபதேசம் செய்தார். அவர் கூறியதை அப்படியே நாங்கள் ஏற்று அவரை பின்பற்றிவருகிறோம் இதற்காக இவர்கள் எங்கள் மீது கோபங்கொண்டு எங்களை துன்புறுத்துகிருர்கள். தங்கள் தேசத்தில் அடைக்கலம் புகுந்தால் எங்களுக்கு தீமை விளையாதென்ற இங்குவந்தோம் என விடையிறுத்தார்.

மன்னர் = உங்கள் வேதத்தில் நின்றும் ஒரு சிறிது படித்துக் காட்டும் என வினவ,

ஜஃபர் அவர்கள் "சூரா மர்யம்" என்ற 19-வது அத்தியாயத்தில் சிறிது ஓதிக்காட்டினர்.

ஆண்டவனுடைய திருவசனத்தின் கம்பீர நடையும் உண்மையான கருத்தும் மோனை எதுகைகளுடன் கூடிய நற்போதனைகளும் அவரது மனதை உருக்கிவிட்டது. அவர் உடனே "ஆண்டவன் மீது சத்தியமாக இத்திருவேதமும் இஞ்சீலும் ஒரே ஜோதியினின்றும் வெளியான இரண்டு கிரணங்களாக காணப்படுகின்றன" என்று கூறி முஸ்லிம்களை குப்பார்களிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டார். மறு தினம் இயேசுவைப்பற்றி முஸ்லிம்கள் குறைவாக கொள்கிறார்கள் என்று ஒருவர் முறையிட்டார் அதன் உண்மையை தெரிய ஜஃபர் ரலி அவர்களை மன்னர் ஈசாவைப்பற்றிய கொள்கை யாதெனகேட்க, உண்மையை சொன்னால் மன்னன் கோபத்திற்காளாக நேரிடுமோ வென்ற பயமிருந்தும் ஜஃபர் (ரலி) அவர்கள் "ஈஸா நபி அவர்கள் அல்லாஹ்வின் அடியாரென்றும் அவனுடைய தூதரென்றும் எங்கள் நபி, போதித்திருக்கிறார்கள், என்று உண்மையான விடையே கொடுத்தார்கள் உடனே நஜ்ஜாஷி என்ற அம்மன்னர் தரையிற் கிடந்த துரும்பொன்றை எடுத்து" சத்தியமாக இயேசுகிரிஸ்து முஸ்லிம்களால் இப்பொழுது கூறப்பட்டிருப்பதை காட்டினும் இந்த துரும்பத்தனைகூட, அதிகமாயில்லை, என்று கூறி முடித்தார்.

எனவே நஜ்ஜாஷி அரசரின் முடிவால் ஏமாற்றமடைந்த குறைஷியர் மக்கத்திலுள்ள மற்றும் முஸ்லிம்களை அதிக கொடுமைக்கு ஆளாக்கி வந்தார்கள். ஆனதால் மறு வருஷமும் ஹபஷாவுக்கு சுமார் 83 ஆண்களும் 18 பெண்களுமுள்பட 101 முஸ்லிம்கள் (குழந்தைகள் நீக்கி) பிரயாணப்பட்டார்கள். பின்னர் அபூ ஜஹ்ல் என்னும் கொடியோன் ஒரு தினம் நபி பெருமானை உதிரம் சொரிய அடித்த விஷயத்தை கேள்வியுற்ற நபி பிரானின் சிறிய தந்தை "ஹம்ஜா" ஆத்திரமுண்டு

அபூஜஹ்லே பதிலுக்கு தன் வில்லால் காயப்படுத்தி இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டார்கள். இது குறைஷியர்களுக்கு மிகுந்த ஆக்ரோஷத்தை உண்டு பண்ணியது. எனவே அபூ ஜஹ்ல் "உமர்" என்ற வாலிபரை அழைத்து முஹம்மத் நபி (ஸல்) யை கொன்றுவிட்டால் தகுந்த சன்மானமளிப்பதாய் சொன்னான். அந்தப்படியே வாளேந்தியகையுடன் எம்பிரான் அவர்களை கொல்லுவதற்காக புறப்பட்ட உமர் (ரலி) அவர்களை வழியில் நயீம் என்பவர் சந்தித்து வேகமாக எங்கு செல்லுகின்றீர் என்று கேட்க உமர் (ரலி) முஹம்மத் (ஸல்) அவர்களை கொல்லப்போவதாகச் சொல்லவே முதன் முதலில் நீர் உமது சகோதரியும் சகோதரி புருஷனும் அந்த முஹம்மத் (ஸல்) மார்க்கத்தில் சேர்ந்ததை அறியீரோ? அதை முதலில் தெரிந்துகொண்டு அப்புறம் முஹம்மத் (ஸல்) இடம் செல்லும் என்று சொன்னார். அதுகேட்டு உமர் (ரலி) கடுங்கோபங் கொண்டு சகோதரி வீட்டுக்குச் செல்ல அங்கு சகோதரியும் சகோதரி புருஷரும் **திரு குர்ஆன்** ஓதிகொண்டிருந்ததை கேட்டு திடீரென்று கதவை இடித்தார். கதவு தட்டும் சப்தம் கேட்டு சகோதரி கதவை திறந்து தமையனை உள்ளே அழைத்து வந்தார். இங்கே யார் என்ன ஓதிக்கொண்டிருந்தார்கள் என்று கோபத்துடன் கேட்க அவ்வாறு ஒன்றும் ஒருவரும் ஓதவில்லை என மிக அமைதியுடன் பதில் கூறினார். அதைக்கேட்டு உமர் (ரலி) அவர்களுக்கு அதிக கோபம் பிறந்து தன் மைத்துனரை தாக்கினார். அதை தடுத்த அவர் சகோதரிக்கும் காயம் ஏற்பட்டு ஒழுகி வடியும் உதிரத்துடன்: ஆம் நாங்கள் இஸ்லாத்தில் சேர்ந்துவிட்டோம். உம்மால் ஆனதை செய்துகொள்ளும். என மொழிந்தார்கள். சகோதரியின் தைரியத்தையும் உறுதியையும் கண்ட

உமர் (ரலி) சிறிது மனவிரக்கத்துடன் தனது சகோதரியை நோக்கி எங்கே அந்த குர் ஆனை எனக்கு கொஞ்சம் கொடு ஓதி பார்க்கிறேன் என்று வேண்டினார். திருக் குர்ஆனை அவமதிக்கக்கூடாது என்று உறுதிபெற்று குர்ஆன் ஷரீபை கொடுத்தார். அதை சிறிது வாசித்த உமர் (ரலி) அவர்கள் அதிலுள்ள தெய்வீக உண்மைகளையும் நேர்மையையும் கண்டு அவ்விடத்திலேயே மனப்பூர்வமாக இஸ்லாத்தில் சேருவதாய் உறுதி கொண்டு நேரே நபிகள் பிரான் விடுதிக்கு சென்று இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

'வரிசை நபியே, முஹம்மதுவே, வானோர்க் கரசே, புவிக்கரசே
உரிய தனியோன் முதல் தூதே, உமது கலிமாவுரைப்படியே
அரியமறை தேர்ந்து ஈமான்கொண்டறத்தார் ஒழுகும்படி கருத்திற்
கருதியிவணி லடைந்தேன் என்றுரைத்தார் உமருகத்தாபே (சீறா)

இச் செய்தி குறைஷியர்களுக்கு எரியும் கொள்ளியை ஏறத்தள்ளுவதுபோல் ஆயிற்று. ஆகையால் அவர்கள் நபிகளார் அவர்களையும் அவர்களைச்சார்ந்த முஸ்லிம் முஸ்லிமல்லாத பனு ஹாஷிம் வர்க்கத்தினர் எல்லோரையும் (அபூலஹப் தவிர) ஒரு மலைக்கணவாயிலில் அடைத்து ஜாதிகட்டுபாடு செய்துவிட்டார்கள். இத் தொல்லை சுமார் 3 ஆண்டுகள் மட்டும் நிலைத்திருந்தது. அக்காலத்தில் அவ்வடைபட்ட மக்கள் அடைந்த அவதி சொல்லுந்தரமன்று உணவின்றியும் வாடினார்கள். பின்னர் மக்காவிலுள்ள இளைஞர் சிலரின் நன்முயற்சியால் அவ்விடுக்கண் ஒழிந்து ஹாஷிம் குடும்பத்தினர் விடுதலை பெற்றார்கள். அப்பால் நபித்துவத்தின் 10-வது வருஷத்தில் (நபிபிரானின் 50 வது வயதில்) நபிபிரானின் உறு துணைவியாய் விளங்கிய கதீஜா பிராட்டியாரும் அபூதாலிபும் தேகவியோகமாய் விட்டார்கள். கதீஜா நாயகி இறந்த

பின்னர் நாயக மவர்கள் தனிமையாயிருப்பதை உத்தேசித்து அபூபக்கர் (ரலி) அவர்கள் தமது குமாரத்தியாம் ஆயிஷா பீபியை விவாஹம் செய்துகொள்ளும்படி வேண்டிக்கொண்டார்கள். நாயக மவர்களும் சம்மதித்து விவாஹம் செய்துகொண்டார்கள். கதீஜா பிராட்டியாருக்கும் அபூதாலிப் அவர்களுக்கும் சற்று அஞ்சியிருந்த குப்பார்கள் இனிதங்கள் துஷ்டத்தனத்தை அடக்குவதற்கு ஆள் எவருமில்லை எனக் கண்டு ரசூல் நாயகத்தை ஹிம்ஸிக்கலானார்கள்.

எனினும் நபிகள் பிரான் (ஸல்) மற்ற முஸ்லிம்களைப் போல் தாங்களும் ஹபஷா சென்று அடைக்கலம் புக எண்ணினார்களில்லை, ஏனெனில் சத்தியமே ஜெயம் என்பதைப்பற்றி அவர்கள் சற்றும் சந்தேகிக்கவில்லை எப்பாடு பட்டேனும் தங்கள் சகோதரக் குறைஷியர்களை இஸ்லாத்தில் சேர்த்து ஆத்மரக்ஷிப்பை கொடுக்கவேண்டுமென்ற ஆர்வமே அவர்களிடம் அதிகம் ஊறிக்கொண்டிருந்தது. இறைவன் நாடுவானாயின் தங்கள் உயிர்ப்பகைஞராய் விளங்கும் குப்பார்கள் உயிர் தோழர்களாய் மாறிவிடுதல் கூடுமென்றே அப்பெரியாரின் உறுதியான எண்ணமாக இருந்து வந்தது. ஆயினும் ஆத்திரமூண்டு நிற்கும் மக்கத்து குப்பார்களை சிறிது விட்டுவைத்து விக்ரஹத்தொழும்பில் மக்காவிற்கடுத்த ஸ்தானத்தை வகிக்கும் "தாயிப்" என்ற நகருக்கு சென்று ஆங்குள்ள மக்களை நல்வழி படுத்தலாம் என எண்ணி அங்குசென்றார்கள் ஆனால் அங்குள்ள காவாலிகள் நமது திருநபி அவர்களை கல்லாலெறிந்து உதிரம் சொரிய காயப்படுத்தி துரத்தி விட்டார்கள் அப்பொழுது சொரிந்த உதிரத்தால் பெருமானாரின் (ஸல்) பாதரச்சைகளும் நனைந்துவிட்டன. இங்ஙனம் தாயிபிலும் அதிக கஷ்டமுற்று, மக்காதிரும்பிய நபிபிரானின் (ஸல்) பரி

தாப நிலைமையைகண்டு மக்கத்து குறைஷியர்கள் எள்ளி நகை யாடினர். ரசூலுல்லா (ஸல்) ஹவுக்கு அக்காலம் ஒரு பெரும் சோதனையாகவே யிருந்த தென்றாலும் அவர்கள் சற்றும் தளர்வடையாது இறைவனிடமே தங்களை முழுக்க ஒப்புக் கொடுத்து அவனது உதவியை நாடியே குறையிரந்தார்கள் அவர்கள் அதுபோது தங்கள் மதப்பிரசாரத்தை யாத்திரைக் காக வரும் வெளியூர் வாசிகளிடையேயும் சந்தைகளில் கூடும் மனிதர்களிடையேயும் பிரசாரம் செய்யலானார்கள். நபிகள் பெருமான் (ஸல்) செல்லுமிடங்களிலெல்லாம் அபூலஹப் என் பவரும் சென்று எதிரிடைபுரிந்து வந்தார். ஆயினும் மதீனா வினின்றும் அகபாவுக்கு வந்த அறுவர்கள் நபிபிரானின் (ஸல்) நற்போதனையை ஏற்று அக்கணமே முஸ்லிமானார்கள். அத் துடன் அவர்கள் மதீனாவிற்கு திரும்பி ஆங்கும் இஸ்லாத் தைப்பற்றி பிரசாரம் செய்த காரணத்தால் இன்னம் பலர் இஸ்லாத்தை தழுவலாயினர். பெருமானாரின் கீர்த்தியும் மதீனா வெங்கணும் பரவலாயிற்று. நபிகள் (ஸல்) பிரானுக்கு இது சமயந்தான் மிஃறாஜ் (விண்ணுலக யாத்திரை) நடைபெற் றது. நுபுவ்வத்தின் 12-வது ஆண்டில் (52-வது வயதில்) துல்ஹஜ்மாதம் யாத்திரைக்காக அரப் நாட்டின் பல பாகங் களிலிருந்தும் ஜனங்கள் மக்காவிற்கு வரலாயினர் மதீனாவிலி ருந்து வந்த பலருள் சுமார் 75 முஸ்லிம்களுமிருந்தார்கள். அவர்கள் நபிகள் திலகத்தை தனியே நடு இரவில் சந்தித்து மக்கத்துக்காபிர்களின் கொடுங்கோன்மைக்குட்பட்டு கஷ்டப் படுவதைவிட, தங்களுடன் மதீனாவிற்கே வந்துவிடுதல் நல மென்றும் அங்ஙனம் வந்து விடுவதாயின் அப்பெருமானாரின் பாதுகாப்பின்பொருட்டு தங்கள் உடல் பொருள் ஆவியையும் அர்ப்பணம் செய்துவிடத் தயாரென்றும் கையடித்து பிரமா

ணம் செய்துகொடுத்தார்கள். அதுமுதல் பெருமானாரும் சிறுகச்சிறுக தம் சிஷ்யர்களை மதீனாவுக்கு அனுப்பிக் கொண்டே வந்தார்கள். இங்ஙனமாக 2 மாத காலத்துள் சுமார் நூறு குடும்பத்தினர் வரை மதீனா சென்றுவிட்டார்கள். இறுதியில் மக்காவில் நபிபெருமானாருடன் அபூபக்கர் (ரலி) அவர்களும் அலி (ரலி) அவர்களுமே எஞ்சியிருந்தார்கள். அத்துடன் அடிமைப்பட்ட சில முஸ்லிம்களுமிருந்தனர். நாளுக்குநாள் பாழடைந்துவரும் மக்காவின் நிலைமையையும் ஆரம்பத்திலேயே தோண்டி புதைத்துவிட அரும்பாடுபட்ட இஸ்லாம் மதீனாவில் தினம் தினம் படர்ந்து வளரும் பான்மையையும் கண்ட குறைஷியர்களின் வயிற்றெரிச்சல் கொழுந்துவிட்டெரிந்தது. இதற்கு மூல காரணமாயுள்ள முஹம்மத் (ஸல்) நபி அவர்களை கொன்றுவிடவேண்டுமென்ற எண்ணமேற்படலாயிற்று. முன்னால் சென்றுவிட்ட தோழர்களைபோன்று நபிகளுநாதரும் (ஸல்) மதீனா சென்றுவிடல் நலமென அபூபக்கர் (ரலி) அவர்கள் அடிக்கடி கூறிவந்தார்களாயினும் ஆண்டவனது கட்டளையின்றி மக்காவைவிட்டு வெளியேற முடியாதென்றே நம்பெருமானார் (ஸல்) நவின்று வந்தார்கள். அத்தகைய தேவகட்டளையும் நுபுவ்வத்தின் 13-வது ஆண்டின் ஆரம்பத்தில் கிடைத்தது—இதற்கிடையில் அபூஜஹல் தமது குழாத்தினரைகூட்டி,

இனிமேல் முஹம்மதை (ஸல்) கொல்லாது விடக்கூடாது. மக்கத்திலுள்ளவர்களை, தனது மார்க்கத்தில் சேர்த்து மதீனத்துக்கும் மற்ற இடங்களுக்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறார். நமது நகர், நாளுக்கு நாள், ஜனத் தொகையும் குறைந்து செல்வாக்குமிழந்து வருகிறது ஆனதால் முஹம்மத் (ஸல்) தமதில்லத்திலிருந்து வெளிவரும் போது

எல்லோருமாய் சேர்ந்து ஒரேசமயத்தில் தங்கள் வாட்களால் குத்தி கிழித்து விடவேண்டுமென்ற யோசனை கூறி அதன்படி திட்டம் செய்துகொண்டு அன்றிரவே, நபிகள் பிரானின் வீட்டை, முற்றுகை செய்துகொண்டார்கள். எல்லாம்வல்ல இறைவனின் வல்லமையில் இப்பாதகர்களின் சூழ்ச்சி எம்மாத்திரம்?

இவர்கள் வீட்டை வளைந்து முற்றுகைசெய்திருப்பதை அறிந்துகொண்ட, நபிகள்பிரான், தமது படுக்கையில் அலி (ரலி) அவர்களை படுத்துக்கொள்ளும்படி செய்து மெதுவாக வீட்டைவிட்டு வெளியேறி அபூபக்கர் (ரலி) அவர்கள் வீட்டுக்குச்சென்று அவர்களையும் அழைத்துக்கொண்டு மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் புறப்பட்டார்கள் அங்ஙனம் அவர்கள் தம்மில்லத்தை விட்டு புறப்படுங்கால் அதனை முற்றுகை இட்டிருந்த எதிரிகளெல்லாம் அயர்ந்து தூங்கிவிட்டார்கள் என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றார்கள் மக்காவை விட்டு புறப்பட்ட நபிபெருமானார் (ஸல்) தங்கள் உயிர்தோழர் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் தௌர்" என்னும் குகையில் மறைந்திருந்தார்கள் முஹம்மதுர்ரசூல் (ஸல்) அவர்களை, வீட்டில் காணாத எதிரிகள் ஏமாற்றமும் கோபமும் அடைந்தவர்களாய் அவர்களை தேடிக்கொண்டு அந்த குகைவாயில் வரை சென்றார்கள். ஆனாலும் ஆண்டவன் தன் திருநபி அவர்களை மிகலகுவில் பாதுகாத்தருளினான். குகைவாயிலில் பின்னியிருந்த சிலந்தி பூச்சியின் மெல்லிய நூலிழையே, பாதுகாப்பிற்குரிய பெருங் கற்கோட்டையாக பரிணமித்தது. அந்தக் குறைஷிக்காபிர்கள் குகையினுட் பிரவேசிக்க, எண்ணினார்களாயினும் வாயிலில் பின்னப்பட்டிருக்கும் நூலிழையைக்கண்டு அக்குகையில் மனிதர்கள் சென்றிருப்பது முடியாதென்ற எண்ணத்துடன் திரும்பிவிட்டார்கள்.

இவர்கள் குகை வாயிலின் வெளியே தேடிக்கொண்டு வந்தபோது காலடி சப்தம் கேட்ட அபூ பக்கர் (ரலி) அவர்கள் எதிரிகள் பலபேர் வந்திருக்கிறார்களே! நாம் இருவர் தாமே இருக்கிறோம் என்று அதிகம் கைசோர்ந்து மெய் தளர்ந்து கூறினார்கள். அதனைகேட்டு நபிகள் திலகம் அதிக தைரியத்துடனும் அளவற்ற சாந்தத்துடனும் "ஓ அபூபக்கர் நாம் இருவர்தாம் என்று நீர் கொஞ்சமும் யோசிக்க வேண்டாம். நாம் இருவராயில்லை ஆனால் மூவராக இருக்கிறோம். ஏனெனின் நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கிறான்." என்று கூறினார்கள், இங்ஙனம் மூன்று தினம் குகையில் இருந்த பின்னர் நான்காவது நாள் மதீனா நோக்கி புறப்பட்டார்கள், மதீனாவிற்கு வழிகாட்டியாக அப்பொழுது உதவியவர் அப்துல்லாஹ்பின்அரீகத் என்னும் விக்ரஹத்தொழும்பரேயாவர். மக்காவின் காபிர்கள் நபிகளின் உயிரை தொலைத்து விட நினைக்கும்போது அக்காபிர்களில் ஒருவரே, நபிகள் திலகத்துக்கு மதீனாவிற்கு செல்ல வழிகாட்டி செல்கிறார் என்றால் அந்த ஆண்டவனின் அற்புத மஹாத்மியம் அளவிட முடியுமா?

இங்ஙனம் ஒரு இரவும் பகலும் நடந்து மறுதினம் மத்தியானம் 12-மணி சுமாருக்கு ஒரு பாறை நிழலில் சிறிது களைப்பு ஆறுவதற்காக தங்கினார்கள். சமீபத்தில் ஆடு மேய்த்திருந்த ஒருவரிடம் ஆட்டுப்பால் வாங்கி பருகி களைப்பு ஆறிய பின்பு புறப்பட ஆயத்தமாக இருக்கும்போது இவர்களை தேடி வந்த ஸுராகா என்பவர் குதிரை மீது வேகமாக வந்தார். நபிகள் பிரானை தேடிவந்த குறைஷியர்கள் தௌர் குகை வரை தேடிவிட்டு மக்கா திரும்பிவிட்ட பின்னர் குறைஷியர்கள் ஒன்றுகூடி முஹம்மத் (ஸல்) அவர்களையும் அபூபக்கர்

(ரலி) அவர்களையும் யார் சிறைபிடித்தோ அல்லது கொன்றோ" கொண்டு வருகிறார்களோ அவர்களுக்கு 100 ஒட்டகங்களும் இன்னும் பலவித வெகுமானங்களும் கொடுக்கப்படும் என்று பறை அடித்திருந்தார்கள். இதை அறிந்த ஸுராகாவென்பவர் தான் பிடித்தோ கொன்றோ கொடுத்துவிட்டால் நல்ல சன்மானம் கிடைக்கும் என்ற எண்ணத்தோடு தமது குதிரை மீது புறப்பட்டார். இவர் நெடுந்தூரம் வந்த பின் கண்ணுக்கெட்டிய தூரத்தில் நால்வர் தெரிந்தஉடன் வேகமாக தனது குதிரையை விட்டுக்கொண்டு வந்தார். அவர் அப்படி ஓடி வரும் வேகத்தில் குதிரையின் கால்கள் இடறி குதிரை குப்புற வீழ்ந்ததனால் ஸுராக்காவும் அதன் தலைக்கு மேல் தூக்கி எறியப்பட்டார். உடனே அவர் எழுந்து நின்று தம்முடைய தேசாசார முறைப்படி அம்புகளை எடுத்தெய்து சகுனம் பார்த்தார். அதற்கு அவரை பின் தொடர்ந்து செல்லாதே என்று விடை கிடைத்தது. ஆனால் அவர் அதனை பொருட்படுத்ாது 100 ஒட்டகங்களின் மீதுள்ள பிரியத்தால் மீண்டும் அதன் மீது சவாராகி சென்றார். மறுபடியும் அக்குதிரை இடறி விழுந்து அவரை கீழே தள்ளிற்று. மீண்டும் அவர் முன் போலவே குறிபார்த்தார். முன் தடவையைப் போலவே இப்பொழுதும் பதில் கிடைத்து திரும்பவும் அவர் மனந்தளராமல் குதிரை மீதேறி நபிகள் பிரானை நெருங்கி சென்று தமது அம்பால் அவர்கள்மீது எய்யத் துணிந்தார். அது சமயம் அவரது குதிரையின் முன்னங்கால்கள் இரண்டும் மணலுக்குள்ளே முழங்கால் அளவு பதிந்துவிட்டதனால் மற்று மொரு முறை அவர் முன்போலவே தூக்கி எறியப்பட்டார். இவ்வாறு மூன்று முறை நிகழ்ந்ததின் பின் நபிகள் பெருமானின் ஸன்மார்க்க முயற்சி முழுவதும் ஜெயம் பெற ஆண்டவன் நாடி

யிருப்பதாக இவர் நன்குணர்ந்து அக்கணமே நபிகள் (ஸல்) பெருமானிடம் சென்று நடந்தவை அத்தனையும் கூறி மன்னிப்பு பெற்று இஸ்லாத்தை தழுவினர்.

பின்னர் துயர்ந்து பிரயாணத்தை நடத்தி மதீனத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். நபிகள்பிரான் மதீனுவுக்கு புறப்பட்ட விஷயம் மதீனுவாசிகளுக்கு தெரிந்து ஒவ்வொரு தினமும் மதீனுவாசிகள் நபிகள்பிரானை சந்திப்பதற்காக வழியில்வந்து காத்து நின்று திரும்புவார்கள். ஒரு தினம் அவ்வூர் கோட்டை மைதானத்தில் ஏறி நின்று பார்த்தவொருவர் நெடுந்தூரத்தில் இரண்டு ஒட்டகங்களில் சிலர் வருவதாக தெரிவித்ததின்பேரில் ஜனங்கள் திரளாக கூடி அல்லாஹு அக்பர் என்ற கோஷத்துடன் மதீனுவின் தென் பகுதியில் 3 மைலுக்கு சமீபமாக இருக்கும் "குபா" என்ற இடத்திற்கு எதிர்கொண்டழைக்க வந்தார்கள். நபிகள் பிரானும் அதே இடத்திற்கு வந்து சேர்ந்ததும் ஜனங்கள் எல்லோரும் பெருமகிழ்ச்சியால் அல்லாஹு அக்பர் என்று வானமளாவகோஷித்து வரவேற்றார்கள். குபாவென்னும் அப்பகுதி மிக வளம்பொருந்தியதாகவும் அழகானதாகவும் காணப்பட்டதால் அவ்விடத்திலேயே நபிகள் நாயகமும் அவர்களைச்சார்ந்த தோழர்களும் பதினன்கு தினம்வரை தாமதித்து இருந்தார்கள். இதுகாறும் நபிபெருமானை நேரில் காணப்பாக்கியம்பெறாத மதீனுவாசிகள் நேரில் வந்து கண்டு களித்து சென்றார்கள். அப்படி வரப்பட்டவர்கள் ஆண்டவன் திருத்தூதர் அபூபக்கர்(ரலி) இருவர்களில் யார் நபிபெருமான் என்பது தெரியாது சந்தேகத்திலாழ்ந்துகொண்டிருந்தனர். இதனை ஹஜரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் உணர்ந்து நபிகள் நாதரை பிரித்துக்காட்டவேண்டுமென்ற பெரு நோக்

கங்கொண்டு நபிகள் (ஸல்) பிரானுக்கு நிழல்விழுமாறு எழுந்து குடைபிடித்து நின்றார்கள். இவ்வாறு செய்ததனால் நபிகள் பிரானை மதீனா வாசிகள் எளிதில் தெரிந்துகொள்ள ஏதுவா யிற்று. நபிகள்பிரான் அப்பொழுது முதன்முதலாக குபாவில் ஒரு மஸ்ஜித் கட்ட ஆரம்பித்தார்கள் அது வேலை பூர்த்தியான உடன் அங்கிருந்து வெள்ளிக்கிழமை காலையில் மதீனத்துக்கு புறப்பட்டு செல்கையில் வழியில் ஜும்ஆ தொழுகைக்குரிய நேரம் வந்துவிட்டபடியால் "வாதீபனீஸாலிம் என்ற நீரோ டையில் தங்கள் கைகால்களை சுத்திசெய்துகொண்டு அங்கோ ரிடத்தில் ஜும்ஆ தொழுகை நடத்தினார்கள். இதுவே முதல் ஜும்ஆ தொழுகையாகும்.

இதில் நபிகள் பிரான் ஆங்குகூடியிருந்த முஸ்லிம்களுக்கு நிகழ்த்திய, குத்பா (பிரசங்கம்)

"புகழடங்கலும் அல்லாஹ்வுக்கே, உரியதாகும் நான் அவனை புகழ்கிறேன். மேலும் அவனிடமே உதவி தேடுகி றேன். அவனிடமே நேர்வழிகாட்ட விரும்புகிறேன், அவன் மீதே நன்னம்பிக்கை வைக்கிறேன். நான் அவனுக்கு விரோ தம் செய்யமாட்டேன் அவனை வெறுப்பவர்களை நான் வெறுக் கிறேன். வணக்கத்திற்குரியவன் அவனைத்தவிர்த்து வேறு யாருமில்லைஎன்றும் முஹம்மத் (நான்) அவனுடைய அடிமை யாகவும் தூதராகவும்மிருக்கிறேனென்றும் நான் சாக்ஷியம் கூறுகிறேன்.

நெடுங்காலமாக நபிமார்களில்லாது போனதால் அறி வும் ஞானமும் குன்றி அஞ்ஞானம் நிறைந்து இருள் சூழ்ந்து கொண்டிருக்கும் இச்சமயத்திலே நேர்வழியுடனும் பிரகாசத் துடன் முஹம்மதை அனுப்பிவைத்தான். இறுதிகாலத்தி

னும் கியாமத்துக்குச் சமீபமாகவும் மரணத்திற்கு சமீபமாகவுமுள்ள சமயத்திலேதான் அவன் அனுப்பிவைத்தான் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் வழிபட்டு நடந்தவன் நிச்சயமாகவே நேர்வழி அடைந்தான். ஆனால் அவர்களிருவருக்கும் மாற்றம் செய்தவன் நிச்சயமாகவே அதிகம் வழிகெட்டு நோான பாதையினின்றும் நெடுந்தூரம் சருகி போனவனாயிருக்கிறான்.

ஓ நேசர்களே! ஆண்டவனுக்கஞ்சி நடக்க வேண்டுமென்று நான் உங்களுக்கு சொல்லுகிறேன். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு சொல்லவேண்டியதில் சிறந்ததாவது இறுதி நாளன்று நன்மையை பெறுவதன் பக்கம் அவனை தூண்டவேண்டும். ஆண்டவனுக்கஞ்சி நடந்துகொள்ளும்படியும் சொல்லவேண்டும். நண்பர்களே, எதை செய்ய வேண்டாமென ஆண்டவன் உங்களை விலக்கியிருக்கிறானோ அதனை செய்யாமலிருங்கள். அதைவிட மேலான உபதேசமில்லை, மேலான தியானமில்லை. இறுதிநாளில் நன்மையை பெறும் பொருட்டு ஆண்டவனுக்கஞ்சி நல்ல கருமங்களை செய்பவனுக்கு (தக்வாவெனும்) உள்ளச்சம் பெரிதும் பிரயோஜனம் தரத்தக்கதாயிருக்கின்றதென்பதை நீங்கள் அவசியம் கவனித்தல் வேண்டும்.

யாரேனுமொருவன் தனக்கும் அல்லாஹ்வுக்குமிடையே சம்பந்தம் பெற்றிருக்கும் காரியங்களில் அந்தரங்கத்திலும் பகிரங்கத்திலும் நன்ருகவும் நேர்மையாகவும் நடந்துகொள்வதுடன் தன்னுடைய எண்ணத்தையும் பரிசுத்தமாக வைத்துக்கொண்டிருப்பானாயின் அவனுக்கு இவ்விஷயம் இகத்திலும் பரத்திலும் நன்மையின் பொக்கிஷமாக அமைந்துவிடும்.

ஆனால் இவ்வாறு நற்கருமங்களை செய்ய எவனேனும் தவறிவிடுவானாயின் அவன் தனக்கும் அதற்குமிடையேநெடுந் தூரமிருக்கவேண்டுமென நேசிக்கிறவனாகிறான். ஆண்டவன் தன்புறத்திலிருந்து உங்களுக்கு அச்சமூட்டிஎச்சரிக்கை செய்கிறான். மேலும் அல்லாஹ் அடியார் மீது இரக்கங்கொள்பவனாயிருக்கிறான். எவன் அவனுடைய வாக்குறுதியை உண்மை என நம்பி தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றி வைப்பதுடன் அதற்கு விரோதமும் செய்யாமலிருக்கிறானோ அவனுக்கு ஆண்டவன் சொல்வதாவது, என் வார்த்தைக்கு விரோதமும் மாற்றமும் செய்யப்படமாட்டாது. மேலும் நான் அடியார்களுக்கு அக்கிரமம் செய்யக்கூடிய அநியாயக்காரனல்ல. நீங்கள் இரகசியமாகவும் பகிரங்கமாகவும் செய்யக்கூடிய ஒவ்வொரு காரியத்திலும் அல்லாஹ்வுக்கஞ்சி நடந்துகொள்ளுங்கள். ஏனெனின் எவன் அல்லாஹ்வுக்கஞ்சி நடந்துகொள்ளுகிறானோ அவனுடைய பாபத்தை அல்லாஹ் பொறுத்துக்கொள்ளுகிறான். மேலும் அவனுக்கு சரியான நல்ல பிரதிபிரயோஜனத்தையும் அளிக்கிறான். இன்னமும் எவன் அல்லாஹ்வுக்கஞ்சி நடந்துகொள்ளுகிறானோ அவன் நிச்சயமாக மஹாபெரிய ஜெயத்தைபெற்றவனாவான். இன்னமும் ஆண்டவனுக்கஞ்சி நடப்பதென்னும் தக்வாவானது, முகங்களை எல்லாம் பிரகாசிக்கச்செய்கின்றது. தன்னிறைவனை சந்தோஷமடையுமாறு செய்கின்றது. தன் அந்தஸ்தை உயரும்படி செய்கின்றது. நீங்கள் நற்பயன்களை பற்றிக்கொள்ளுங்கள். ஆண்டவனுக்குரிய பாத்தியதைகளில் அளவு கடந்து செல்லாதீர்கள். ஆண்டவன் தன்னுடைய வேத போதனையை உங்களுக்கு தெரியப்படுத்தியிருக்கிறான் தன்னுடைய நேரான பாதையை உங்களுக்கு விளக்கியிருக்கிறான். இதனால் நேரான

பாதையை உறுதிபடுத்தியவர்களையும் பொய்யாக்கி வைத்தவர்களையும் அல்லாஹ் அறிந்துகொள்ளுகிறான். அல்லாஹ் உங்கள்பால் அழகாய் நடந்துகொண்டிருப்பதைப்போல, நீங்கள் மக்கள்பால் நடந்துகொள்ளுங்கள். அல்லாஹ்வின் பகைவர்களை நேசிக்காதீர்கள். அவன் உங்களை மேலானவர்களாகச் செய்தான். உங்களுக்கு முஸ்லிம்கள் என்ற நாமத்தையும் சூட்டியிருக்கிறான்.

ஒன்றுக்குமுதவாமல் நாசமாய் போகிறவனும் நல்ல விதமாக ஜீவித்திருப்பவனும் ஆண்டவனுடைய ஆதாரங்களை தெரிந்துகொள்ளட்டும். அல்லாஹ்வைகொண்டேயொழிய எவ்வித திராணியுமில்லை. அல்லாஹ்வின் தியானத்தை அதிகப்படுத்திக்கொள்ளுங்கள். அடுத்து வரும் ஜீவிப்பிற்காகவேண்டிய காரியங்களை செய்யுங்கள் எவனொருவன் தனக்கும் அல்லாஹ்வுக்குமிடையே இருக்கும் வியவகாரங்களை சீர்படுத்திக் கொள்ளுகிறானோ அவனுக்கு மக்கள்பால் காணக்கிடக்கும் வியவகாரங்களை அல்லாஹ் சீர்படுத்துகிறான். ஆண்டவன் அடியார்கள் மீது அதிகாரம் செலுத்தி நற்காரியங்களை ஏவுகிறான் அவன் மீது யாரும் அதிகாரம் செய்யமாட்டார். அல்லாஹ் அடியார்களுக்கு எஜமானன். அல்லாஹ் மிகப்பெரியவன் நன்மை செய்வதற்கு வேண்டிய சக்தி பெரியவனான அல்லாஹ்வின் உதவிகொண்டேயல்லாது நமக்குகிடைக்கப்போவதில்லை

இது முடிந்ததும் பின் மதீனத்தை நோக்கி புறப்பட்டு (நபித்துவம் வந்த 13-வது வருடம் ரபீவுல் அவ்வல்மீ பிறை 23ல் வயது 53), வெள்ளிக்கிழமை அன்று சுகமே மதீனமா நகர் சென்றடைந்தார்கள். இதிலிருந்துதான் முஸ்லிம்களின் ஹிஜ்ரி வருஷம் ஆரம்பமாகின்றது. மதீனா சென்ற நபிகள்

பிரான் ஆங்கு சன்மார்க்கப்பிரசாரத்தை நடத்திக்கொண்டும் முஸ்லிம்களிடையேயும் யூதர்களிடையேயும் நேச பாவத்தை உண்டுபண்ணிக்கொண்டுமிருந்தார்கள். இங்ஙனம் பிரசாரத்தின் மூலம் ஜனங்கள் இஸ்லாத்தில் சேர்ந்துவருகையில் தொழுகைக்காக பள்ளிவாசல் ஒன்று கட்டிமுடித்தார்கள். அதில் முஸ்லிம்கள் தொழுதுவருங்கால் எல்லா முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து ஆண்டவனை தொழுவது மேலானதால் அங்ஙனம் ஜனங்களை ஒன்று சேர்க்க சிலரை நியமிக்கலாமென நபிகள்பிரான் அபிப்பிராயப்பட்டார்கள். அப்படி செய்வது சிரமமானகாரியமானதால் ஜனங்களை கூட்டி ஆலோசித்தார்கள். உயரமான இடத்தில் தொழுகை நேரத்தில் ஒரு கொடியை உயர்த்தலாமென சிலரும் மணி அடித்து வரவழைக்கவேண்டுமென்று சிலரும் சங்கூதவேண்டுமென்று சிலரும் நெருப்பை கொளுத்தி அடையாளம் காட்டவேண்டுமென சிலரும் அபிப்பிராயம் சொன்னார்கள் அவைகளில் ஒன்றும் பெருமானாருக்கு திருப்தியில்லாததால் ஒப்புக்கொள்ளவில்லை. கடேசியாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்—பாங்கு என்னும் அழைக்கும் முறையை சொன்னார்கள் அது திருப்தியாயிருந்ததால் அதை ஒப்புக்கொண்டு—முதன் முதல் மதீனாவின் புதுப்பள்ளியிலேயே அம்முறை ஆரம்பிக்கப்பட்டது.

ஹபஷ் நாட்டு அடிமையாயிருந்து இஸ்லாத்தை தழுவியதற்காக குறைஷியர்களால் தீராக்கஷ்டத்திற்குள்ளாகியும் நபிபிரானிடம் பூரண விசுவாசம் கொண்டிருந்த ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கே முதலில் இப்பாக்கியம் கிடைத்தது.

பாங்கின் பொருளாவது,

ஆண்டவன் மிகப்பெரியவன். 4-தடவை

வணக்கத்திற்கு உரியவன் ஆண்டவன் ஒருவனைத் தவிற

வேறு யாருமில்லையென்று நான் நிச்சயமாக அறிந்து சாக்ஷியம் கூறுகிறேன். 2-தடவை

முஹம்மத் நபி அவர்கள் ஆண்டவனின் தூதர் என்றும் நான் நிச்சயமாய் அறிந்து சாக்ஷியம் கூறுகிறேன். 2-தடவை

தொழுகைக்காக வாருங்கள். 2-தடவை

ஜெயம் பெறுவதற்காக வாருங்கள். 2-தடவை

ஆண்டவன் மிகப்பெரியவன்.
ஆண்டவன் மிகப்பெரியவன்.

ஆண்டவனைத் தவிற வணக்கத்திற்கு பாத்திரமானவன் வேறொருவருமில்லை.

காலை (சுபஹ்) தொழுகைக்கு
தூக்கத்தைவிட தொழுகை மேலானது. 2-தடவை

ஆண்டவனை வணங்குவதற்காக அழைக்கும் இந்த உன்னத கருத்துள்ள வாக்கியங்களை கேட்ட மாத்திரத்துள் அரசனும் ஏழையும் வலியவனும் மெலியவனும் தங்கள் வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு பள்ளிவாசலுக்கு விரைந்து வந்துவிடுவார்கள். இம்முறையே இப்பொழுதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

மதீனாவின்கண் இவ்விதமாக இஸ்லாம் தழைத்தோங்கி வருவதைக்கண்ட மக்கத்துக் குறைஷியர்களின் பொறாமை அதிகரித்து முஹம்மத் (ஸல்) அவர்களையும் இஸ்லாத்தையும் தொலைத்துவிட ஆவலுடன் சமயத்தை எதிர்பார்த்து வந்தார்கள்.

ஆகவே ஹிஜ்ரி, 2-வது வருஷத்தில் சுமார் 1000க்கு மேற்பட்ட குறைஷி போர்வீரர்களை திரட்டி மதினாவின்மீது

படைஎடுத்தார்கள் அத்தகைய படை எடுப்புக்கு "முஸ்லிம்கள் ஸீரியாவுக்கு சென்றுவரும் வர்த்தக கூட்டத்தை தாக்கப்போகிறார்கள் என்ற வதந்தியை கிளப்பிவிட்டு அதை ஆதாரமாக கொண்டு படை எடுத்தார்கள். தங்கள் மீது படை எடுத்து வருவதை அறிந்த திருத்தூத (ஸல்) ரவர்கள் தங்களிடமிருந்த சிறியர் பெரியர் வயோதிகர்களடங்கிய 313 நிராயுதபாணிகளான முஸ்லிம்களை திரட்டிக்கொண்டு எதிரிகளை தடுக்கச்சென்றார்கள். பத்ரு என்னுமிடத்தில் போர் நிகழ்ந்தது. ஆண்டவன் உதவியையே அதிகம் நம்பியிருந்த அந்த முஸ்லிம்கள் ஆயுதபாணிகளான குறைஷியர்களை துரத்தியடித்து வெற்றிக் கொடி நாட்டினார்கள். இதுவே இஸ்லாத்தின் தற்காப்பினிமித்தம் நடைபெற்ற முதல் யுத்தமாகும். ஆராய்ந்து பார்ப்போருக்கு இவ் யுத்தம் குறைஷியர்களால் வம்புக்கிழுத்த சண்டையென்பதும் முஸ்லிம்கள் தற்காப்பு னிமித்தமே போரிடவேண்டியதாயிற்று என்றும் நன்கு விளங்கும். பத்ரில் முழுத்தோல்வியுற்று புறமுதுகுகாட்டிய குறைஷியர்கள் மறு வருடம் சற்றேறக்குறைய 3000 வீரர்களை சேர்த்துகொண்டு உஹத் என்னும் இடத்தில் போர் தொடுப்பதற்காக வந்தனர்.

இதை கேள்வியுற்ற நபிகள்பிரான் உஹத் யுத்தத்திற்காகப் படை திரட்டினார்கள். அருகதையற்றவர்களை நீக்கி 700 பேர்கள்கொண்ட படை திரண்டது. அதிலும் சிலர் பதினாறு வயதுக்கு உட்பட்டவர்களாதலால் அவர்களை திரும்பி செல்லும்படி உத்திரவிடப்பட்டது. இச்சிறுவர்களது ஊக்கமும் மார்க்கபக்தியும் மார்க்கத்திற்காக ஆவிதுறக்கும் தியாகமும் அவர்களை திரும்பச்செய்ய இசையவில்லை. இவர்களில் ஹஸ்ரத் ராபிஃபின் கதீஜ் (ரலி) என்பவர், தாம் சிறியவர் என்பது

தெரியாமல் இருப்பதற்காக தமது குதிங்காலை உயர்த்திக் கொண்டு கால் விரல்களின் மீது நின்று தம்மை உயர்த்திக் காண்பித்தார்கள். அவர்களது இத்தந்திரம் கைமேல் பலன் கொடுத்தது. அவர்கள் இப்படி நிற்பதற்குண்டான காரணத்தை (அதாவது யுத்தத்தில் சேரவேண்டுமென்ற ஆவலை) தெரிந்து அவர்கள் படையோடு சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் வயதுள்ள ஸமரா (ரலி) அவர்களை திரும்பி செல்லும்படி கூறப்பட்டபோது அன்னார் நான் ராபிஃ (ரலி) அவர்களை கீழே வீழ்த்திவிடுவேன் அங்ஙனமிருக்க நான் ஏன் திரும்பிபோகவேண்டும் என்றார்கள். இவ்விருவருக்கும் குஸ்திவிடப்பட்டு சோதித்ததில் ராபிஃ அவர்களை கீழே வீழ்த்திவிட்டதால் இன்னாருக்கும் அநுமதி கிடைத்துவிட்டது. வீரர்களோடு உஹத்மலைக்கு சமீபமாகப்போய் சேர்ந்து உஹத்மலையை முதுகுபுறமாக்கி அணிவகுத்தார்கள். ஹஸ்ரத் முஸ்அப் அவர்கள் கரத்தில் கொடி கொடுக்கப்பட்டது பின்புறமிருக்கும் மலையின் கணவாய் வழியே குறைஷியர்கள் வந்துவிடுவார்கள் என்னும் பயத்தால் அப்துல்லாஹ் பின் ஜுபைர் = (ரலி) அவர்கள் தலைமையின்கீழ் 50 வில் வீரர்களை அப்பக்கம் நிறுத்திவைக்கப்பட்டது.

இவர்களை பார்த்து பெருமானார் உங்கள் அம்புகளால் எதிரிகள் இப்பக்கம் வாராதபடி தடுங்கள் நாங்கள் வெற்றியடைந்தாலும் தோல்வி அடைந்தாலும் நீங்கள் உத்திரவன்றி இவ்விடமிருந்து அசையக்கூடாது எனக்கட்டளையிட்டார்கள். எதிர்பக்கத்தில் குறைஷிகளும் அணிவகுத்தனர்.

இருதரப்பாரும் வேகமாக சண்டை செய்தனர். குறைஷிகள் பக்கத்து தல்ஹா வென்பவன் அணியைவிட்டு முன் வந்து முஸ்லிம்களை நோக்கி முஸ்லிம்களே! என்னை சீக்கிரம்

நாகத்திற்கனுப்பவோ அல்லது உங்களில் சுவர்க்கம் புகு வதற்கோ விருப்பமுள்ள யாரேனுமுண்டா? என கேட்டான் உடனே அலி (ரலி) அவர்கள் அணியைவிட்டு முன் வந்து எனக்கு விருப்பமுண்டு என்று சொல்லிக்கொண்டே அவனை வெட்டி வீழ்த்தினார்கள். முஸ்லிம்கள் பக்கத்தில் ஹஸரத் ஹம்ஜா (ரலி) ஹஸரத் அலி (ரலி) அபுதஜானு முதலியவர்கள் குறைஷிகள் சேனைகளில் பாய்ந்து ஒவ்வொரு அணியாக காலிசெய்து எதிரிகளை கலங்கச்செய்தார்கள். ஹஸ்ரத் ஹம்ஜா (ரலி) அவர்கள் இருகரங்களிலும் வாள் ஏந்தி எதிரி களை வெட்டி வீழ்த்திசெல்லும்போது இவர்களை குறிப்பாய் கவனித்திருந்த வஹஷி என்னும் பெயருடைய நீக்ரோ அடிமை ஒருவன் (இவனுடைய எஜமானன் ஹம்ஜா (ரலி) அவர்களை வெட்டினல் இவனை சுவாதீனப்படுத்துவதாக சொல்லியிருந்தான்) ஹம்ஜா (ரலி) அவர்கள் சமீபம் வந்த போது தன் கையிலிருந்த சிறிய ஈட்டியினுல் அவர்களை குறி பார்த்து எய்தான். அந்த ஈட்டி ஹம்ஜா (ரலி) அவர்களது கொப்புழில் பட்டு உள்ளே புகுந்துவிட்டது. ஹஸரத் ஹம்ஜா (ரலி) அவர்கள் அவனை தாக்க எண்ணங்கொண்டார்கள் ஆனல் கால் தடுமாறி கீழேவிழுந்ததும் பிராணன் பிரிந்துவிட் டது. மற்ற முஸ்லிம்கள் தாக்குதலினுல் குறைஷியர்கள் சின்னுபின்னமுற்றுவிட்டனர். அவர்கள் அணிகள் அழிந்து தலைவர்களின் ஊக்கமும் குன்றி சேனைகளுக்கு தூண்டுதல் செய்துகொண்டிருந்த பெண்களும் நம்பிக்கையில்லாமல் பின்னடைந்தார்கள். சேனைகளும் பின்வாங்கின. அது சம யம் முஸ்லிம்கள் பின்வாங்கிய குறைஷியர்களை தாக்கிக் கொண்டே குறைஷியர்கள்விட்டு சென்ற பொருட்களை சேக ரிக்கத் தொடங்கினர். இதை கண்ட மலை கணவாயிலில்

நிறுத்திவைக்கப்பட்டிருந்த வில் வீரர்களும் ஷே பொருட் களை சேகரிக்குமிடத்திற்கு வந்துவிட்டார்கள். இவர்களின் தலைவராக இருந்த ஜுபைர் (ரலி) தடுத்தும் கேளாமல் இவர் கள் அந்த இடத்தைவிட்டு வந்துவிட்டதை கவனித்து காபிர் களின் குதிரைவீரர்கள், உடனே அந்த கணவாய் வழியாக உட்புகுந்தார்கள். உட்புகுந்தவர்களை அப்துல்லா இப்னு ஜுபைர் (ரலி) அவர்களும் அவர்களுடன் சேர்ந்த சிலரும் தடுத்தும் பிரயோஜனமில்லை. அவர்களனைவரும் வெட்டப் பட்டனர். அப்புறம் கணவாய் பாதை தடுப்பாரின்றியிருந் ததால் காபிர்களின் குதிரைவீரர்கள் அதன் வழியே தாராள மாக வந்து முஸ்லிம்களை பின்புறமாக தாக்க ஆரம்பித்தனர். குறைஷிகளின் பொருள்களை சேகரித்துக்கொண்டிருந்த முஸ் லிம்களை பின்புறமாக தாக்குவதை தெரிந்த முன்புறத்திலுள்ள குறைஷிகள் தைரியங்கொண்டு அவர்களும் தாக்க ஆரம்பித் தார்கள். இரண்டுபக்கத்து தாக்குதல்களுக்கும் உள்ளான முஸ்லிம்கள் குழப்பம் அடைந்து இவர்களும் தாக்க ஆரம்பித் தார்கள். இரண்டுபக்கத்து சேனைகளும் கைகலந்ததில் தன் படை மாற்றான் படை தெரியமுடியாமல் அநேக முஸ்லிம்கள் முஸ்லிம்களுடைய கையினாலேயே வெட்டப்பட்டார்கள்.

இதுசமயம் முஸ்லிம்கள் சேனையில் கொடி பிடித்திருந்த நபிகள் பிரானின் முக சாயலையுடைய முஸ் அப்பின் உமைர் என்பவரை ஒரு குறைஷியானவன் வெட்டிவிட்டான். அத் துடன் தான் நபிபிரானை கொன்றுவிட்டதாகவும் கூக்குரலிட் டான். இச்சப்தத்தை கேட்டதும் முஸ்லிம்கள் சேனையில் எங்கும் குழப்பமுண்டாகிவிட்டது. பெரிய பெரிய வீரர் களின் கால்கள் எல்லாம் நடுங்க ஆரம்பித்துவிட்டன. இக் குழப்பத்தில் முன்னணியானது பின்னணியின்மேல் விழுந்து

பெரிய கலக்கமாயிருந்தது. பெருமானவர்கள் திரும்பி பார்த்த தில் அணியின் ஒரு பாகத்தில் 11 பேர் மட்டும் நின்றுகொண் டிருந்தார்கள். அவர்கள் முக்கியமான தளகர்த்தர்கள். மற் றவர்களில் பெரும்பாலோர் ஊக்கத்தை இழந்துவிட்டதோடு பேர்போன வீரர்கள் அநேகர் சோர்ந்துவிட்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தமது வாளை வீசிக் கொண்டு அணியில் புகுந்தார்கள் ஆனல் பெருமானுரை கண்டு கொள்ளமுடியவில்லை. ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களின் சிறிய பிதாவான 'இப்னுநலர்' அவர்கள் சண்டை செய்து கொண்டே முன்னேறினார்கள். போகும்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நம்பிக்கை இழந்து கையிலுள்ள ஆயு தத்தை கீழே எறிந்திருப்பதை பார்த்து அவர்களை நோக்கி இங்கே என்ன செய்கிறீர்கள் என்று கேட்கவும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இப்போது சண்டைசெய்து என்ன ஆகும் நபிபெருமானே உயிர்துறந்துவிட்டார்களே! என்று சொல்ல இப்னு நலர் அவர்கள் நபிபெருமானுக்குப்பின் நாம் உயிருடன் இருந்து என்ன செய்யப்போகிறோம் என்று சொல்லிக் கொண்டே சேனைக்குள் புகுந்து சண்டை செய்ததில் உயிர் துறந்தார்கள். சண்டை முடிந்ததின்பின் அவர்கள் சரீரத்தை இனம் கண்டுபிடிப்பது கஷ்டமாக முடிந்தது. அவ்வளவு காயங்கள் அவர்கள் தேகத்தில் இருந்தன. சண்டை நடந்து கொண்டிருக்கும்போது முஸ்லிம்கள் கவனம் பூராவும் நபி பெருமானை தேடுவதிலேயே இருந்தது. 'கஅப் இப்னுமாலிக்' என்பவர் பெருமான் அவர்களை கண்டுபிடித்து முஸ்லிம்களுக்கு சப்தமிட்டு அறிவித்தார். முஸ்லிம்கள் யாவரும் அப்பக்கம் ஓடி நபிபெருமானை வளைந்துகொண்டனர். குறைஷியர்களும் அப்பக்கம் விரைந்துசென்றனர். ஆனல் ஹஸ்ரத் அலி (ரலி)

அவர்கள் அவர்களை விரட்டிவிட்டார்கள். குறைஷி வீரர்களில் பேர்போனவனான அப்துல்லா இப்னு கமியா என்பவன் ஜனங்களை விலக்கிக்கொண்டு நபிபெருமான் இருந்த இடத்திற்கு வந்து தன் கையிலிருந்த வாளை அவர்களுக்கு நேராக வீசினான். அது அவர்கள் அணிந்திருந்த முக கவசத்தில் பட்டு கவசமுடைந்து கவசத்தின் 2 துண்டு நபிகள்பிரானின் முகத்தின் கன்னப்பக்கத்தில் புகுந்துகொண்டது. அதனால் ஒரு பல்லும் ஷஹீதாகிவிட்டது. அதேசமயம் பெருமான் அவர்களை குறிவைத்து நாலுபக்கமிருந்தும் அம்புகள் எய்யப் பட்டன. இதைக்கண்ட முஸ்லிம் வீரர்கள் நபியெருமானை சுற்றி வளைந்து மனிதக்கோட்டைபோல் நின்றார்கள். அபுதஜானா என்பவர் பெருமானை மறைத்து நின்று தனது சரீரத்தை கேடயமாக்கிக்கொண்டார். எதிரிகளின் அம்புகள் மனிதக் கோட்டையாக வளைந்துள்ள முஸ்லிம் வீரர்களின் முதுகு புரங்களில் விழுந்தது. தல்ஹாவென்பவர் எதிரிகளின் வாள் வீச்சுகளை தன் கையினால் தடுத்ததில் அவர்கள் கை வெட்டப் பட்டுவிட்டது. கடேசியாக எதிரிகளால் ஏககாலத்தில் வீசப் பட்ட 2 வாட்கள் நாயகமவர்களை தாக்கியதில் அவர்கள் மூர்ச்சித்து கீழேவிழுந்தார்கள். அவர்களுக்கு அபூபக்கர் (ரலி)அவர்கள் தண்ணீர் கொண்டுவந்து தெளித்ததில் மயக்கம் நீங்கியது. கை சேதமான தல்ஹா அவர்கள் அபூபக்கர் (ரலி) அவர்களை பார்த்து நாயகம் எப்படியிருக்கிறார்கள் என்று வினவ சுகமாக இருக்கிறார்கள் அவர்கள்தான் என்னை அனுப்பினார்கள் என்று பதிலிறுத்தார்கள். இதைக்கேட்ட தல்ஹா அவர்கள் புகழ் அடங்கலும் அல்லாஹ்கே உரியது. இந்த சுபசமாச்சாரத்திற்குபின் எத்தகைய துன்பம் வந்த போதிலும் எனக்கு அது இலேசானதாகவேயிருக்கும் என்று

சொன்னார்கள். குறைஷிகள் பெருமானை நோக்கி அம்பு எய்யும்போது பெருமானவர்கள் வாயிலிருந்து "ஆண்டவனே என்னுடைய சமூகத்தார்களை மன்னித்தருள். அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள் என்ற வார்த்தைகளே வந்துகொண்டிருந்தது. இந்த நிலைமையில் பெருமானவர்கள் தங்களை சேர்ந்தவர்களுடன் சமீபத்தில் இருந்த குன்றின்மேல் ஏறினார்கள்.

அக்குன்றை நோக்கி ஓடிவந்த குறைஷியர்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் மற்றும் சஹாபாக்களும் விரட்டிவிட்டார்கள் ஆனால் குரைஷ் சேனையிலுள்ள 'உபை இப்னுகல்ப்' என்பவன் முன்னொருதடவை பதர்ச்சண்டையில் முஸ்லிம்களிடம் சிறையாகி மீட்புத்தொகை கொடுத்து விடுதலை அடைந்தவன் விடுதலையாகி போகும்போது நான் உம்மை கொல்லுவேன் என்று நபிபெருமானை பார்த்து சொல்லிவிட்டு போனான் அதற்குவிடையாக பெருமானாரவர்கள் "இல்லை கடவுளுடைய நாட்டமிருந்தால் நீ என்னுடைய கையினால் கொல்லப்படுவாய் என்று சொல்லியிருந்தார்கள் அவன் பெருமானாரவர்கள் சமீபமாக நெருங்கி வருவதை சில முஸ்லிம்கள் கண்டு அவனை தாக்குவதற்கு முன் சென்றார்கள் ஆனால் நபி அவர்கள் முஸ்லிம்களை நோக்கி, நீங்கள் விலகிக்கொள்ளுங்கள் அவன் என்னிடம் வரட்டும் என்று சொல்லிவிட்டு ஹாரிஸ் இப்னுசம்மா என்பவரிடமிருந்த ஒரு ஈட்டியை வாங்கி முன் சென்று உபையைக்குறித்து வீசினார்கள் அந்த ஈட்டி அவன் சரீரத்தில்பட்டு விலாவெலும்பு முறிந்து அழுதுகொண்டு குறைஷியர்களிடம் ஓடிவிட்டான். அவன் அழுவதை குறைஷியர்கள் கண்டு காயம் கடுமையாக இல்லையே ஏன் இவ்விதம் அழுகிறாய் என்று கேட்டதற்கு எனக்கிருக்கும் கஷ்

டத்தை இங்கிருக்கும் எல்லோரும் பகிர்ந்துகொள்வதானல் அத்தனைபேரும் மாண்டுவிடுவீர்கள் அந்த முஹம்மத் (ஸல்) தம்முடைய கையினல் என்னை கொன்று விடுவதாக முன்னமே சொல்லியிருந்தார் அவருடைய எச்சில் என்மீது விழுந்தாலும் கடவுள் சத்தியமாக நான் தப்பமாட்டேன் என்று சொல்லி 2, 3 தினங்களில் மாண்டுபோனன்.

பெருமானுரவர்கள் காலம் சென்றுவிட்டதாக கிளம்பிய வதந்தி மதீனவிற்கு எட்டி அங்கிருந்து அவர்களை பார்ப்பதற்காக அநேகர் (ஆண் பெண் உள்பட) ஆவலுடன் ஓடி வந்தனர். அவர்களில் கன்ஸா இப்னு அபூ ஆமிர் என்பவரும் ஒருவர். அவருக்கு அன்றுதான் விவாஹமாகியிருந்தது. அவர் விரைந்து வந்ததும் குறைஷிகளின் சைனியத்தில் புகுந்து வெட்டி சாய்த்துக்கொண்டு முன்னேறி அபூஸுப்யானை நெருங்கிவிட்டார். ஆனல்மற்ற எதிரிகள் அவருக்கு காயத்தை உண்டாக்கி உயிர்துறக்கச்செய்துவிட்டார்கள். பெருமானரின் அருமை புதல்வி. பாத்திமா (ரலி) அவர்கள் பெருமானரவர்களை வந்து பார்க்கும்போது நபிகளின் வதனத்திலிருந்து இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. திருமுகத்தில் புகுந்துகொண்டிருந்த கவசத்துண்டுகளை அபூஉபைதா இப்னு ஜர்ராஹ் என்பவர் பற்களால் கடித்து இழுத்து அத்துண்டுகளை வெளியாக்கினர். அதன்காரணமாக இழுத்தவரின் பற்கள் இரண்டு முறிந்தன. ஹஸரத் அலி (ரலி) அவர்கள் கொண்டுவந்ததண்ணீரால் பாத்திமாநாயகி அவர்கள் நாயகத்தின் முகங்களை கழுவினர்கள்.

எதிர்படையின் தலைவர் அபூசுப்யான் ஓர் குன்றின் மேல் ஏறிநின்றுகொண்டு ஏ ஹுபலே (குறைஷியர்களின் முக்கிய விக்ரஹம்) நீ உயர்ந்திருப்பாயாக என்று சப்தமிட்டு

தமது ஜெயத்தை தெரியப்படுத்தினர். பெருமானரின் உத்திரவுப்படி முஸ்லிம்கள் அல்லாஹு அஃலா வஅஜல் (ஆண்டவனே உயர்ந்தவன்) என சப்தமிட்டார்கள். இதைக்கேட்டு அபூசுப்யான் உமர் (ரலி) அவர்களை கூப்பிட்டார். நாயகம் போகும்படி சொன்னர்கள். அங்கு சென்ற உமர் (ரலி) அவர்களை நோக்கி அபூசுப்யான் முஹம்மத் (ஸல்) கொல்லப்பட்டு விட்டாரா இல்லையா என்றார். அதற்கு உமர் (ரலி) அவர்கள் நாயகம் மலை மீதிருக்கிறார்கள் என்று சொன்னதும், கொன்றுவிட்டதாக கூறிய இப்னு கமியாவைவிட நீர் உண்மையாளர் என்று நான் நம்புகிறேன். ஆனல் இது பதர் யுத்தத்திற்கு பகரம் மீண்டும் அடுத்த வருஷம் நமது சண்டை பதரிலேயே நடக்கும் என்றார். நபிபெருமானரும் நல்லது எமக்கும் சம்மதம் என பதிலளிக்கும்படி ஆக்ஞாபித்தார்கள்.

மதீனத்திலிருந்து வந்துகொண்டிருந்தவர்களில் பெரும்பாலோர் பெண்களே அவர்கள் எல்லோரும் தங்கள்உறவினர்களைவிட நபிகள் பிரான் க்ஷேமத்தையே கேட்டு தெரியவந்தார்கள். அங்ஙனம் வந்த பெண்மணிகளில் பதிவிரதாசிரோன்மணியொருவர் பெருமானரை பார்ப்பதற்காக போர்க்களத்திற்கு வந்தார் வரும் வழியில் திரும்பி சென்ற சிலர் அப்பெண்மணியைப்பார்த்து உம்முடைய பிதா சண்டையில் உயிர்துறந்துவிட்டாரே என்று சொன்னர்கள். அதற்கு அம்மாது நாமெல்லோரும் ஆண்டவனுக்காகவே இருக்கிறோம். நிச்சயமாக அவனிடமே மீண்டுஞ் செல்வோம் என பதிவிறுத்து நாயகம் எப்படியிருக்கிறார்கள் என வினவ. அதைக் கேட்ட ஜனங்கள் உமது சகோதரரும் இறந்துவிட்டாரே எனக் கூறினர்கள். அதற்கும் அம்மாது அவ்விதமே மறுமொழி சொல்லிவிட்டு நபிபெருமான் எப்படியிருக்கிறார்கள்

என்று வினவ திரும்பவும் அச்சனங்கள் உமது கணவரும் கொல்லப்பட்டுபோனுரே என்றுசொல்ல அம்மாது பெருமூச் செறிந்து நாமெல்லோரும் நிச்சயமாகவே அல்லாஹ்வுக்காக வே இருக்கிறோம். அவனிடமே மீளுவோம் என்று சொல் லிவிட்டு பெருமானவர்கள் எங்ஙனமிருக்கிறுர்கள் என்று கேட்டார்.

பெருமானவர்கள் சுகமாக இருக்கிறுர்கள் என்றுகேட்ட பிறகு அவருடைய கவலைகள் எல்லாம் பறந்தோடிவிட்டது. போர்க்களத்திற்கு வந்து பெருமானுரவர்களை கண்டு தம்மை யறியாமலே தாங்களிருக்கும்போது எவ்வளவு துன்பம் வந் தாலும் எங்களுக்கு அவைகள் ஒன்றும் கவலையில்லை. நானும் என் பிதாவும் என் சகோதாரும் என் கணவரும் தங்களுக்கு அர்ப்பணமாகிறோம். தீனுடைய அரசரே! தங்களைப் பெற் றிருக்கும்போது கேவலம் நாங்கள் என்ன? என்று கூறினுர். பெருமான் அவர்களிடம் அவர்களை சேர்ந்தவர்கள் எவ்வளவு அன்பும் அபிமானத்தோடும் இருந்தார்கள் என்பதற்கு இது தக்கசான்ருகும். அந்தயுத்தத்தில் மொத்தம் 70 முஸ்லிம்கள் கொல்லப்பட்டுபோனுர்கள். இறந்தவர்களின் அங்கங்களை எதிரிகள் சேதப்படுத்தி அவமானப்படுத்திவிட்டார்கள். எதிரிகள் யுத்தகளத்தை விட்டு திரும்பி செல்லும்போது சண்டையில் நாம் ஜெயித்ததாக எண்ணினேம் ஆனல் ஜெய மடைந்ததற்கு ஒரு அடையாளமுமில்லை. ஒருவரையும் சிறை பிடிக்கவுமில்லை. யுத்தகளத்தையும் எதிரிகள் வசம் விட்டு விட்டோமே என்று சொல்லிக்கொண்டு சென்றுர்கள்.

இம்முறையும் தங்களுக்கு ஜெயமில்லாது போயினமை கண்டு குறைஷியர்களின் குரோதம் இன்னம் அதிகரிக்கலா யிற்று எனவே அவர்கள் அரேபியா முழுதும் சுற்றுப்பிரயா

ணம் செய்து ஆங்கிருந்த பற்பல அராபிய வர்க்கத்தினரை முஸ்லிம்களுக்கு விரோதமாய் கிளப்பிவிட்டார்கள். மதீனாவிலுள்ள யூதர்களும் நயவஞ்சகமுள்ள சில (முனாபிக்) முஸ்லிம்களும் கூட, இந்த சதியில் கலந்துகொண்டார்கள் இவ்வாறு சூழ்ச்சிகள் செய்து குறைஷியர்களும் மற்றவர்களுமாய் சுமார் 24000 பேர்கள்கொண்ட பெரும்படை திரட்டி ஹிஜ்ரி 5வது ஆண்டில் மதீனாவை முற்று கையிட்டார்கள். நபிபெருமானும் தங்களிடமிருந்த, 3000 வீரர்களுடன் மதீனாவைசுற்றி அகழ் வெட்டிக்கொண்டு யுத்தகோஷம் செய்தார்கள்—சுமார் 3 வாரங்கள் யுத்தம் நடைபெற்றது ஆயினும் தெய்வானுங்கிரஹத்தால் எற்பட்ட பெருப்புயலாலும் மழையாலும் சிதறுண்ட எதிரிகள் தங்கள் பொருள்களை எல்லாம் அங்ஙனமே விட்டுவிட்டு ஓட்டம்பிடித்தார்கள். அந்த அகழ் யுத்தமும் குறைஷியர்களுக்கு பெருந் தோல்வியாக முடிந்தது. ஜெயபேரிகை கொட்டிய நம்பெருமானார் யுத்த முடிவிற்குப்பின், யூதர்களும் முஸ்லிம்களும் யுத்த காலங்களில் ஒருவருக்கொருவர் உதவிசெய்ய வேண்டுமென்றும் எப்பொழுதும் சமாதானத்திற்கு பங்கமில்லாமல் நடக்கவேண்டுமென்றும் செய்துகொண்டிருந்த உடன்படிக்கைக்கு மாற்றமாக இப்பொழுது குறைஷியர்களோடு சேர்ந்து முஸ்லிம்களை எதிர்த்து உடன்படிக்கையை முறித்துக்கொண்டதற்காக பல யூதர்களை மதீனாவைவிட்டு வெளியேற்றி சிலரை யுத்த கால சட்டப்படி மரண தண்டனைக்குட்படுத்தினார்கள்.

ஹிஜ்ரி ஆறுவது ஆண்டில் ஜெயசீலராகிய நபிகள் பெருமான் (ஸல்) அவர்கள் 1400 முஸ்லிம்களுடன் மக்காவிற்கு ஹஜ் செய்யப்புறப்பட்டார்கள். ஆனால் குறைஷியர்கள் மக்காவிற்குள் பிரவேசிக்கவிடாது தடுத்துவிட்டனர். அது சம

யம் முஸ்லிம்கள் யுத்த ஸன்னதர்களாக இருந்தார்களாயினும் நபிகள்பிரான் (ஸல்) அத்தகைய சம்பவம் நடைபெறவொட்டாது தடுத்து ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதுவே ஹுதைபிய்யா உடன்படிக்கை எனப்படும். அதன் முக்யாம்சமாவது.

1. முஸ்லிம்கள் இவ்வருஷம் ஹஜ் செய்யாமல் திரும்பி விடவேண்டும். அடுத்த வருஷம் முஸ்லிம்கள் மக்காவுக்கு வரும்போது கத்தியை தவிர வேறு ஆயுதங்களை கொண்டுவரக் கூடாது. அவைகளையும் உறைக்குள் போட்டுகொண்டுவர வேண்டும். அவர்கள் மூன்று தினங்கள் மக்காவில் தங்கி யிருக்கலாம். அத்தினங்களில் குறைஷிகள் வெளியே சென்று விடுவர்.

2. அரபிகளில் முஸ்லிம்கள் தங்களுக்கு விருப்பமான வர்க்கங்களுடனும் குறைஷிகள் தங்களுக்கு பிரியமான வர்க்கங்களுடனும் உடன்படிக்கை செய்துகொள்ளலாம். இதில் இருதரப்புக்கும் பூரண உரிமையுண்டு.

3. குரைஷிகளில் யாரேனும் உத்தரவின்றி முஸ்லிம்களிடம் வந்துவிட்டால் அவனை திருப்பி அனுப்பிவிடவேண்டும். ஆனால் குரைஷிகளிடம் வந்துவிட்ட முஸ்லிம்கள் திருப்பி யனுப்பப்படமாட்டார்கள்.

4. இருதரப்பாரும் 10 வருஷங்கள் வரை சண்டை செய்யாமல் ஒற்றுமையாய் இருக்கவேண்டும், இவ்வுடம்படிக்கை எழுதிய ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இஸ்லாமிய முறைப்பிரகாரம் "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என துவக்கத்தில் வரைந்தார்கள். குறைஷிகளுக்கு பிரதிநிதியாயுள்ள ஸுஹைல் என்பவர் ரஹ்மான் ரஹீம் என்பது யாரோ எங்

களுக்குத் தெரியாது. பிஸ்மிக அல்லாஹும்ம: என்று எழுதுங்கள் என்றார். அவ்விதமே எழுதப்பட்டது. முஹம்மதர்ரஸூலுல்லாஹி (அல்லாஹ்வின் தீர்க்கதரிசியான முஹம்மத்) என்றெழுதும்போது ஸுஹைறல் ஆச்சேபித்து நாங்கள் உங்களை (நபி) தீர்க்கதரிசி என்று ஒப்புக்கொண்டால் நமக்குள் சண்டை ஏன் ஏற்படுகிறது. முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் (அப்துல்லாவுடைய புத்திரன் முஹம்மத்) என்று எழுதுங்கள் என்றார். அதற்கு பெருமானார் (ஸல்) நீங்கள் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் நான் அல்லாஹ்வின் தீர்க்கதரிசி என்பதுண்மையே எனக்கூறி அவ்வார்த்தையை அழித்துவிடும்படி அலி (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள், பெருமானார் (ஸல்) கட்டளையிட்டும் அப்பதத்தை அழித்துவிட அலி (ரலி) சம்மதிக்கவில்லையாதலால் நபி அவர்களே அதை வாங்கி அழித்தார்கள். இவ்வாறு உடன்படிக்கை முடிவானது. அதேசமயத்தில் அவ்வுடம்படிக்கைக்கு ஒரு பரீக்ஷையும் நடந்தது. அதாவது ஸுஹைறவின் குமாரர் "அபூ ஜந்தல்" இஸ்லாத்தை தழுவியதற்காக காபிர்களால் கஷ்டப்படுத்தப்பட்டார். அவரது தேகத்தில் பல காயங்கள் இருந்தன. அன்னார் எவ்விதமோ மக்காவை விட்டு தப்பித்து உடன்படிக்கை எழுதப்படும் நேரம் அங்கு வந்து சேர்ந்து முஸ்லிம்களிடம் அடைக்கலம் புகுந்தார். ஸுஹைறுடைய புத்திரரை மதீனாவிற்கு அனுப்பிவிடவேண்டுமென்று நபிகள் பிரான் ஸுஹைறலை வேண்டிக்கொண்டார்கள். ஸுஹைறல் சம்மதிக்கவில்லையாதலால் அன்னாரை உடன்படிக்கையின்படி காபிர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

இவ்வுடன்படிக்கை முஸ்லிம்களுக்கு பாதகமாகத்தோன்றியபடியால் நபிகள் பிரானின் தோழர்களில் சிலர் தங்கள்

அதிருப்தியை தெரிவித்துகொண்டார்கள். அதற்கு நபிகள் பிரான் நான் ஆண்டவனுடைய நபி. அவன் ஆக்ஞைப்படி நடக்கிறேன். ஆண்டவன் ஒருக்காலும் குறைவுபடுத்த மாட்டான் என்று கூறினார்கள். இவ்வுடன்படிக்கை பார்வையில் முஸ்லிம்களுக்கு பாதகமாகத் தோன்றினாலும் இதற்கு பின்னால்தான் முஸ்லிம்களுக்கு அமோகமான முழு வெற்றியும்கிடைத்தது பொதுவாக அரபிகளும் குறைஷிகளும் முஸ்லிம்கள்மீது கொண்டுள்ள கோபம் இதனால் ஒடுங்கிற்று. இதர ஜனங்கள் முஸ்லிம்களுடன் கலந்து இஸ்லாத்தை அறிந்துகொள்ளவும் இன்னும் இஸ்லாமிய பிரசாரத்திற்கும் முஸ்லிம்கள் வெளி ஜனங்களுடன் தாராளமாக கலந்து கொள்ளவும் பெருமானார் (ஸல்) பல அரசர்களுக்கும் அதிபதிகளுக்கும் வர்க்கத்தலைவர்களுக்கும் திருமுகங்கள் அனுப்பவும் அதனால் மக்கள் இஸ்லாத்தை தழுவவும் பெரிதும் சௌகரியமாயிற்று. ஒரு சிறுவிஷயத்தில் எதிரிகளுக்கு விட்டுக் கொடுத்த இவ்வுடன்படிக்கையினால் எவ்வளவு பெருமிதமான வெற்றிகிடைத்துள்ளது?

ஆனால் குறைஷியர்கள் உடன்படிக்கைப்படி நடவாமல் முஸ்லிம்களின் நேசக்கூட்டத்தாரை தாக்கி கஃபாவில் துரத்தி சென்று கொலையும் செய்துவிட்டனர். அதற்கு போதிய சமாதானமும் கூறாமல் அன்னார் முஸ்லிம்களை சண்டைக்கும் அழைத்தனர். ஆகவே, ஹிஜ்ரி 8-வது ஆண்டு நபிகணாதர் (ஸல்) 10000 முஸ்லிம் வீரர்களுடன் மக்காவின்மீது படை எடுத்துச் சென்றார்கள். அப்படையை குறைஷியர் எவரும் எதிர்க்காமையால் ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாது அம் மக்கமாநகரை பிடித்துக்கொண்டார்கள். தங்களின் ஜன்ம பகைவர்களாயிருந்து சதா இடுக்கண் விளைவித்து வந்த அக்

குறைஷியர்களையும் பூரணமாக மன்னித்துவிட்டார்கள். நபி பெருமானின் இத்தயாள சிந்தை குறைஷியர்களின் உள் ளத்தை கவர்ந்தது. எனவே, கூட்டங்கூட்டமாய் அவர்கள் மனமுவந்து இஸ்லாத்தை தழுவலாயினர்.

மறு வருஷம் ஹஜ்ஜுக்கு சென்ற முஸ்லிம்கள் மக்கா வெங்கும் இனி விக்ரஹ வணக்கக்காரர்கள் கஃபாவுக்குள் ஹஜ் செய்ய அநுமதிக்கப்படமாட்டார்களென்றும் நிர்வாணமாக கஃபாவை தவாபுசெய்யும் புராதன வழக்கம் கூடாதென்றும் நபிகள்பிரான் பிறப்பிவித்திருந்த உத்தரவை விளம்பரப்படுத்தி னார்கள். இவ்வண்ணம் விக்ரஹ வணக்கத்திற்கு அவ்வாண்டில் சவக்குழி தோண்டப்பட்டுவிட்டது பின்னர் ஹிஜ்ரி 10ல் பெருமானாவர்கள் 150,000 சிஷ்யர்களுடன் தங்கள் இறுதி ஹஜ்ஜை நிறைவேற்றுதல்பொருட்டு மக்காவிற்கு விஜயம்செய் தார்கள் தங்கள்மதக்கடமைகளை செவ்வனே நிறைவேற்றிய பின்னர் பக்கத்திலுள்ள அரபாத் மைதானத்தில் ஓர் பிரசங்கம்செய்து முடித்தார்கள். நபிகள்பிரான் அப்பிரசங்கத் திற்காக எழுந்து நின்று பார்க்கையில், கண்ணுக்கெட்டிய தூரம்வரை மனிதத்தலைமயமாயிருந்தது. மானிடக்கடலே போன்ற அப்பெருங்கூட்டத்தை கவனிக்கும்போது காணு தற்கரிய காக்ஷியாகவே காணப்பட்டது. ஆரம்பத்தில் இஸ்லா மிய பிரசாரத்தை நடாத்தியபோது வேண்டாம் விட்டுவிடுங் கள் உங்களை இராஜாக்கி வேண்டிய பொன்னும் மனதிற்கு கந்த பெண்ணும் கொடுக்கிறோம் என ஆசைகாட்டியதுபோக இப்பொழுது அவ்வாசைகளை தாங்களே வெறுத்து தங்கள் ஹிருதயங்களை அப்பெருமானது பாத கமலங்களில் சமர்ப் பித்து அவர்கள் கூறப்புகும் வாய்மொழி யாதென உற்று நோக்கியிருக்கும் கூட்டத்தாரும், பிரசார காலத்தில் இரத்தம்

ஓட கல்லாலடித்து துன்புறுத்திய தாயிப்வாசிகளும், நாய கத்தின் சிரசை கொய்து பழி தீர்க்க முயன்றவர்கள் அப்பெ ருமானரின் பாதுகாப்புக்காக தங்கள் சிரங்களை அம்மணல் புழுதியில் புரண்டுவிழ சித்தமாயுள்ள இளைஞர்களும் அச்சபை யில் நிறைந்திருந்தனர். அதில் நபிபெருமானுக்கு இழைத்த துன்பங்களை நினைத்து பச்சாதாபப்பட்டு வெட்கத்தால் நாணி தலைகுனிந்த சிரங்கள் பலதும் காணப்பட்டன. தங்களின் முயற்சி இறைவனின் திருவருளால் பூரண வெற்றிகரமாய் முடிந்த நிலைமையை காண நபிபெருமான் உள்ளம் பூரித்தது.

எனவே அதுசமயம் அரபநாடு முழுவதையும் தங்களது பாதத்தின்கீழ் கொணர்ந்துள்ள அவ்வதிபதி தனது ஒட்டகத் தின்மீதிலிருந்துகொண்டு மிக உருக்கமாக அங்கிருந்தவர்களை நோக்கி கூறியதாவது

ஓ ஜனங்களே !

நான் சொல்வதை கேளுங்கள் அடுத்த ஆண்டில் உங் களை வந்து காண்பதற்குரிய ஆயுள் நீட்சி எனக்கிருக்குமென்று நான் நினைக்க இடமில்லை. இன்று பரிசுத்தமான துல்ஹஜ்ஜு மாதத்தின் பலிக்குரிய நாளாகும் இது பரிசுத்தமான மக்கமா நகர் எனவே உங்களுடைய உயிர்களும் பொருள்களும் கண் ணியமும் ஒருவருக்கொருவர் இந்த நாளைப்போலும் இந்த நகரத்தைபோலும் பரிசுத்தமாகவே இருந்து வரக்கடவன. அஃஞான காலங்களில் இழைக்கப்பட்ட கொலைகளுக்காக வாங்கவேண்டியிருந்த ஈட்டுத்தொகையும் இன்றோடு தள்ளப் பட்டுவிட்டது எனவே ரபீஃபின் ஹாரிஸின் கொலைக்குள்ள ஈட்டுத்தொகையை நானே மன்னித்துவிட்டேன் ஓ மகா ஜனங்களே? இன்று முதல் ஷைத்தான் உங்களுடைய நாட் டில் தன் பூஜையை நிலைநிறுத்த முடியாது என்று மனந்த

ளர்ந்து எங்கி போய்விட்டான் ஆதலின் ஒரு சிறு விஷயத்தி லும் அவனுக்கு இடம் கொடுத்து விடுவீர்களாயின் அவன் அதிக சந்தோஷமடைந்துவிடுவான் ஆகவே நீங்கள் உங்கள் மதவிஷயத்தில் அதி ஜாக்கிரதையாயிருந்துவரல் வேண்டும்.

ஓ மகா ஜனங்களே! உங்களுக்கு உங்கள் மனைவியர் மீது சில பாத்தியதைக்ள் இருந்துவருவதேபோல் அவர்களுக் கும் உங்கள்மீது சில பாத்தியதைகள் இருந்துவருகின்றன. அவர்கள் ஆண்டவனால் உங்கள் கைவசம்ஒப்படைக்கப்பட்ட அமானத்தாவார்கள். ஆகவே, அவர்களை நீங்கள் எல்லாப் பக்ஷத்துடனேயே நடத்திவரல்வேண்டும்..... உங்கள் அடிமை களைப்பற்றி என்றாலோ நீங்கள் உண்பதையே, அவர்களுக்கும் உண்ணக்கொடுங்கள். நீங்கள் உடுத்துவதையே அவர்களுக் கும் உடுத்தக்கொடுங்கள். ஓ மகா ஜனங்களே! நான் சொல் வதை நன்றாக மனதிலிருத்திக்கொள்ளுங்கள். உங்களுள் ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு சகோதரராயிருக்கிறார் நீங்கள் எல்லோரும் சம அந்தஸ்தையும் சம உரிமைகளையும் அநுபவித்து வருகின்றீர்கள். நீங்கள் ஒரே சகோதரத்துவத் தில் சேர்ந்துள்ளவர்களாயிருக்கின்றீர்கள். ஆகவே, ஒருவர் மற்றொருவருக்கு மனமிணங்கிக் கொடுத்ததையல்லாது மற் றொன்றையும் பிடுங்கிக் கொள்ளாதிருப்பார்களாக இதரர் களின் பாத்தியதைகளை ஆக்கிரமித்து கெடுத்துவிடாதிருப் பார்களாக. நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் நடத்தைக்கும் ஆண்டவனிடம் கணக்கு கொடுத்தாக வேண் டும் முற்கால அனாசாரங்கள் என்காலின் கீழ்மிதியுண்டு விட்டன. அரபியல்லாதவனைவிட, அரபிம் மேம்பட்டவ னல்ல. எல்லோரும் ஆதம் (அலை) அவர்களின் சந்ததிகளே ஆதமோ (அலை) மண்ணினின்றும் படைக்கப்பட்டார்.

எனவே எல்லா முஸ்லிம்களும் சகோதரர்களே. உங்கள் அடிமைகள் மன்னிக்கமுடியாத குற்றம்புரிந்துவிட்டால் அவர்களை உங்களைவிட்டும் விலக்கிவிடுங்கள். ஆனால், கொடுமை செய்யாதீர்கள். நான் உங்களிடம் இவ்விஷயங்களைவிட்டு செல்கிறேன் அவைகள் ஆண்டவனின் திருமறையும் எனது உபதேசமுமாகும். எதுவரை நீங்கள் இவைகளை பின்பற்றுகின்றீர்களோ அதுவரை நீங்கள் வழிவிலகி செல்லமாட்டீர்கள். இங்கு வந்திருப்பவர்கள் வராதவர்களுக்கு இவ்வுபதேசத்தை சுமந்து செல்வாராக. ஏனெனின் உங்களைவிட உங்களிடம் கேட்டு தெரிந்துகொள்பவர்கள் நன்றாக ஞாபகத்தில் வைக்கமுடியும். நீங்களும் என் வார்த்தைகளை நன்றாக மனதில் பதியவையுங்கள். இங்கு கூடியிருக்கும் ஜனங்களே! என் கடமையை நான் சரிவர நடத்திவிட்டேன் என்று நினைக்கிறேன் என கூறினார்கள். ஆங்கு கூடியிருந்தவர்கள் எல்லோரும் ஏகக்குரலில் ஆம் தாங்கள் தங்கள் கடமையை சரிவர நிறைவேற்றிவிட்டீர்கள் என்று சொன்னார்கள்.

நபிபெருமான் (ஸல்) தங்களின் தேவதூது பரிபூரணமாய் நிறைவேற்றப்பட்டதை நிதர்சனமாய் கண்டதும் ஆனந்தபாஷ்யம் சொரிய கரங்களை ஏந்தி ஆண்டவனே நீயே இதற்கு சாக்ஷியாயிருப்பாய் என மும்முறை கூறினார்கள்.

இப்பிரசங்கம் முடிந்ததும், "இன்று உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை பூர்த்திசெய்துவிட்டேன். உங்கள் மீது என்னுடைய கிருபையையும் சம்பூர்ணமாக்கிவிட்டேன். மேலும், உங்களுக்காக இஸ்லாத்தை ஒரு சன்மார்க்மாகத் தெரிந்தெடுத்திருக்கிறேன்" என்ற திருவாக்கியம் இறங்கிற்று.

(குர்ஆன் 5-3)

அரேபியாவின் ஏக சக்கிராதிபதியாய் விளங்கிய அஹ்மதுர் ரசூல் (ஸல்) அவர்கள் தங்கள் பிரசங்கத்தில் தங்கள் குடும்பத்தாரை பேணி ஒன்றுமே கூறாது பொது நன்மைக்கான அடிமைகள் பெண்கள் பலஹீனர்களைப்பற்றி பிரஸ்தாபித்திருப்பது கவனத்திற்கும் பின்பற்றுவதற்குமுரியது. அவர்கள் பிரசங்கம் உலக சமாதானத்தின் பொருட்டு இன்றும் என்றும் பின்பற்றத்தக்கதாகவே மிளிர்கின்றது.

எம்பெருமானாரின் இகலோக வெற்றிகளுள் மகா முக்கியமானது மனித ஜாதியாருக்குள் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அவர்கள் சந்தேகமில்லாமல் ஆணித்தரமாய் நிலைநாட்டியிருப்பதுதான். ஏகதெய்வக்கொள்கையையும் மனிதர்களின் சமத்துவ சகோதரத்துவத் தன்மையையும் எம்பெருமானார் தான் இவ்வுலகில் நன்றாக ஆணிவேர் ஊன்றும்படி நிலைக்கச்செய்திருக்கிறார்கள். வெள்ளையருக்கு வேறு கடவுளென்றும் கறுப்புமனிதர்களுக்குக் கேவலமான மற்றொரு கடவுளென்றும் எம்பெருமானார் சொல்லவில்லை. ஜன்ம பூமியின் வேறு பாட்டாலாவது ஜாதி நிறபேதத்தாலாவது ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதாய் எம்பெருமானார் சொல்லவேயில்லை அவர்கள் அபிப்பிராயத்தில் உலகத்திலுள்ள எல்லா மானிடரும் ஒரே ஜாதிதான் குண விசேஷத்தில் எவனொருவன் மகா சிலாக்கியனாயிருக்கிறானோ அவனே கடவுளுடைய சன்னிதானத்திலும் வேன்மை பெறுவானென்பது எம்பெருமானின் உபதேசமாகும். அவர்களுடைய தெய்வம் அரபு நாட்டுக்கு மட்டும் உரியதன்று, சர்வ லோகங்களுக்கும், (ரப்பில் ஆலமீன்) ரக்ஷண்யகர்த்தனே அவர்களுடைய இறைவனாகும் ஒழுங்கான சன்மார்க்க நடைதான் உயர் பதவியையளிக்கு

மென்று எம்பெருமானர் கூறினர்களேயொழிய தேவாலயத்தில் தனிகர்களெல்லோரும் பஞ்சணையிலும் ஏழைகளெல்லோரும் வெறுந்தரையிலும் உட்கார்ந்து பூஜை செய்யவேண்டுமென்று அவர்கள் சொல்லவில்லை. வெள்ளையர் தொழும் ஆலயத்தில் கறுப்பு மக்களுக்கு இடமில்லையென்று அவர்கள் சொல்லவில்லை வெள்ளையரும் கறுப்பரும் வேதியரும் ஊழியரும் அரசரும் அடிமையும் தனிகரும் தரித்திரரும் எல்லாரும் எமது இஸ்லாத்தில் ஒரே சமம்தான் பள்ளிவாசலில் தொழுகைக்கு நிற்கும்போது எல்லா மனிதர்களும் வேறுபாடில்லாமல் தோளோடு தோள் இணையும்படி வரிசை வரிசையாய் நிற்கவேண்டும் இதுமட்டுமன்று; இன்னும் எமது திருநபியவர்கள் "சீழ் ஒழுகும்படியான புண்களையுடைய தலையுடன் ஒரு நீக்ரோவன் உங்களுக்கு மேலதிகாரியாக நியமிக்கப்பட்டுவிட்டாலும் அவன் சொல்லைக்கேட்டுக் கீழ்ப்படியுங்கள்," என்று கூறியுள்ளார்கள். மற்ற மனிதர்களைக்காட்டினும் உயர்ச்சியைக் காட்டக்கூடிய ஒரு செய்கையையும் எம்பெருமானர் செய்ததில்லை அப்படிப்பட்ட வார்த்தையையாவது அவர்கள் எப்போதும் சொன்னதில்லை. மகா உன்னதமான குண விசேஷங்களுடைய எம்பெருமானர் பதினாயிரக் கணக்கான சிஷ்யர்களுக்கு வேதாச்சாரியாராகவும் ஞானகுருவாகவும் விளங்கிவந்தபோதிலும், "உங்களைப்போல் நானும் ஒரு சாதாரண மனிதன்தான் ஆனல் எனக்கு தேவதூது வருகிறது என்று அடிக்கடி அவர்கள் சொல்லிவருவார்கள். மனிதர்களின் கூட்டத்தில் எமது நபிகள் நாயகம் வந்து நிற்கும்போது அவர்களுடைய நடை உடை பாவனையெல்லாம் சர்வசாமானியமாயிருப்பதால் அயலூரிலிருந்து வரும் எவரும் "உங்களில் யார் முஹம்மத் (ஸல்)?" என்று கேட்பார்கள். மகத்தான அதிகாரத்தை வகித்தவர்போல் பார்ப்பவருக்குத் திகிலுண்டாகும்படி அவர்கள் ஒருபோதும் இருப்பதில்லை.

எமது நபிபிரான் நியாய விஷயத்தில் தமக்கும் தம்முடைய முக்கிய சகபாடியான உமருக்கும் (ரலி) வேறொரு அன்னியனுன எஹூதிக்கும் இடையில் வித்தியாசம் பாராட்டுவதில்லை. ஒருஎஹூதிக்கு எமது பெருமானுர் கடன் கொடுக்கவேண்டியிருந்தது; அந்த யூதன் தனக்குச் சேரவேண்டிய கடனைக் கேட்கவந்தபோது வித்தியாசமாகத் திட்டி நபிகள் நாயகத்தின் கழுத்தில் தன் தலைப்பாகையின் துணியைப்போட்டுமுறுக்கினுன். உடனே உமரேபாரூக் (ரலி) கோபாவேசமூண்டு அந்த யூதனைத் திட்டி அவன் தலையைக் கொய்வதற்கு அனுமதிகேட்டார்கள். அவர்களுக்கு என்ன பதில் கிடைத்தது? "உமர்! அப்படிச்செய்வது நியாயமில்லை. நீர் அந்த யூதனைத் திட்டுவதை விடுத்து அக்கடனைக்கொடுத்து விடும்படி எனக்கு புத்திமதி சொல்லியிருக்கவேண்டும் இப்பொழுதே என் கடனையுந் தீர்த்து எஹூதியைத் திட்டினதற்குக் கொஞ்சம் பணமும் சேர்த்துக் கொடுப்பீராக" என்று சாந்தகுண சீலராகிய எமது திரு நபியவர்கள் உமரே பாரூக்கை (ரலி) கண்டித்தார்கள். யூதனுயிருந்த போதிலும் ஒரு மனிதனுடைய பிறவிச் சுதந்தரத்தைக் கெடுப்பது கூடாது என்று எம்பிரான் சொன்னுர்கள்.

எமது பெருநபியவர்களின் இன்னுமொரு விசேஷ குணத்தையும் இங்கே ஆராய்ச்சி செய்வோம். எம்பெருமான் ஓர் யுத்த வீரராயிருந்ததோடு மகா தருமம் நிறைந்த சுத்த வீரராகவும் இருந்தார்கள். அவர்கள் தங்களுடைய ஜீவ திசை முழுவதும் ஒரு முறையேனும் அக்கிரமச்சண்டை செய்ததே கிடையாது. எஹூதிகளாலும் காபிக்களாலும் முதலில் தாக்கப்பட்ட பின்னரே நபி பெருமானுர் இஸ்லாத்தின் தற்காப்புக்காக முதலில் எல்லா வேலையும் செய்து

பார்த்துக் கடைசியாக வாளை யெடுப்பது வழக்கம். தர்ம யுத்தத்துக்கு வேண்டிய எல்லா முறைகளையும் எம்பெருமானார் அதிக கவனமாக அனுஷ்டித்து வந்தார்கள். இவர்களுடைய சண்டை முகாமிலிருந்து எதிரிகளிருக்கும் இடத்திற்கு ஒரு நீரூற்று ஓடுகின்றது. அதன் ஜலத்தை மறிக்கக்கூடாதென்று தங்கள் தோழர்களுக்கு உத்தரவு செய்கிறார்கள். எதிரிகளுக்கு உதவக்கூடாதென்று எம்பெருமானார் நீர் நிலைகளில் பாஷாணத்தைக் கரைக்கச் சொல்லுவதில்லை. எதிரிகளின் கண்ணைக் கெடுக்கக்கூடிய விஷப் புகைகளை அவர்கள் உபயோகிப்பதில்லை. உடன்படிக்கைகளை வெறுங்காகிதமென்று அவர்கள் ஒரு போதும் சொன்னதே கிடையாது. சுருங்கச் சொல்லுமிடத்து அதர்ம யுத்தம் செய்ய அவர்கள் ஒருபோதும் கனவிலும் கருதினதில்லை. இந்த இருபதாவது நூற்றாண்டில் நாகரீக தேசமென்று சொல்லும் இடங்களில் காணப்படக்கூடிய யுத்த அநாச்சாரங்களெல்லாம் எமது நபி பெருமானாருக்குத் தெரியா. ராணுவச் சட்ட அமுலையும் அடக்கு முறைச்சட்டங்களையும் அப்பெருமானார் கிஞ்சித்தும் அநுஷ்டித்ததில்லை. தோல்வி யடைந்தவர்களையும் துன்பப் பட்டவர்களையும் மார்பினால் நகர்ந்து செல்லும்படி செய்யத் தக்க மஹா நாஸூக்கான (?) தண்டனையை எமது திருநபியவர்கள் செய்ததில்லை. முஸ்லிம்களுக்கு மட்டுமே இவ்வுலகம் சொந்தமென்றும் ஏனையோரையெல்லாம் எமலோகம் அனுப்பிவிட வேண்டுமென்றும் அவர்கள் ஒருபோதும் சொல்லவில்லை. யுத்த நஷ்டமொன்றும் தோல்வியடைந்தவரிடத்தில் அவர்கள் வசூல் செய்வதில்லை. யுத்தகாலத்தில் ஒருவாக்குறுதி அவர்கள் கொடுப்பார்களாயின் வெற்றியடைந்த பின் தங்களுக்கு வேண்டிய வண்ணமாக அதை

மாற்றிக்கொள்ளும் கிரிசமம் அவர்களுக்குத் தெரியாது. சுமார் 12 வருஷங்களுக்கு அதிகமாக நபி பெருமானுருக்கு இரவும் பகலும் இடைவிடாமல் சகிக்க முடியாத துன்பங்களை யெல்லாம் செய்துவந்த எதிரிகள் மக்கா ஷரீபில் கடைசியில் தோல்வியடைந்து தலை குனிந்து வெட்கத்துடன் மௌனஞ் சாதித்து நின்றபோதும் அந்த விஷமிகளை எம் தயாளமூர்த்தி என்ன செய்தாரென்று தெரியுமா? எல்லோரையும் பூரணமாக மன்னித்து விட்டார்கள். இஃதென்ன ஆச்சரியம்! 10000 தோழர்களுடன் நபிகள் நாயகம் மக்கா ஷரீபுக்குச் சென்று அங்ககரை ஒருவித உபத்திரவமும் செய்யாமல் கைக் கொண்ட அந்நாளில் எமது திருநபியவர்கள் கஃபத்துல்லா வின் கதவு நிலைகளைப் பிடித்துக்கொண்டு, "நான் உங்களை என்னவிதம் நடத்தப்போகிறேன் என்பதை நீங்கள் அறிவீர் களா?" என்று குறைஷ் குலக்காபிர்களை நோக்கிக் கேட்ட போது, ஒரு கண்ணியமான சகோதரனிடத்திலிருந்தும் ஒரு கண்ணியமான சகோதரனது புத்திரனிடத்லிருந்தும் எதிர் பார்க்கக்கூடிய நன்மையையே எதிர்பார்க்கிருேம்," என்ருர் கள். அதற்கு நபிபெருமானுர் நல்லது இன்று உங்கள் எல் லோரையும் மனப்பூர்வமாக மன்னித்து விட்டேன். உங்க ளுக்கொன்றும் நிந்தனையில்லை என்று மறுமொழி கூறினர் கள். தோல்வியடைந்தவர்களிடம் அவர்கள் ஒன்றும் தண் டத் தொகை வசூலிக்கவில்லை.

நபிகள்பிரான் சமூக வாழ்க்கையில் உயர்ந்த அந்தஸ்தை வகித்துக்கொண்டிருக்கவில்லை. தங்கள் வீட்டு வேலைகளெல் லாம் தாங்களே சொந்தமாகச் செய்துகொள்ளுவார்கள் வீட்டை சுத்தம் செய்வதும் பாதரக்ஷைகளை பழுதுபார்ப்ப தும் ஒட்டகங்களை பால் கறப்பதும் கிழிந்த ஆடைகளை தைப்ப

தும் அப்புப்போட்டுக்கொள்ளுவதும் தோற் பைகளில் ஜலங் கொண்டுவருவதும் ஒட்டகங்களுக்கு தீனிபோட்டு கட்டுவ தும் வேலைக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு மாப்பிசைவதும் அப்பெருமானாரின் கருமங்களேயாகும். சிறு பிள்ளையாயி ருந்தபோது கஃபாவைக்கட்டுவதற்கு கல்லும் மண்ணும் சுமந்து செல்வார்கள்—மதீனாவில் முதல் மஸ்ஜித் கட்டப் பட்டபோதும் அஹ்ஜாப் யுத்தத்தில் அகழ் வெட்டப்பட்ட போதும் நபிபெருமானுக்கும் மற்றைய சாதாரண வேலைக்கா ரர்களுக்கும் வித்தியாசம் கண்டுபிடிப்பது முடியாது. அப் நாடு முழுவதும் நபிபெருமானது பாதத்தின் கீழ் வந்து மதீனாவின்கண் தங்கமும் வெள்ளியும் குவிந்துகொண்டி ருந்தக்கால் எம்பெருமான் அவர்கள் தங்கள் உபயோகத்திற் காக அவைகளை எடுத்துக்கொண்டதில்லை. வரக்கூடிய பொருள் களை ஏழைகளுக்கு உடனேக்குடன் பாகித்து கொடுத்துவிடு வார்கள். நபிகள்பிரான் தங்களுக்கு கிடைத்ததையே உடுத்திக் கொள்வார்கள். அகப்பட்டதையே புசித்துக்கொள்வார்கள். பாயின் மீதேனும் கம்பளியின் மீதேனும் கிடைத்த இடங்க ளில் உட்கார்ந்துகொள்வார்கள். தங்களுக்கெதிரே வைக்கப் பட்டதையே புசிப்பார்கள். உமி நீங்குமாறும் சலிக்காத கோதுமைமாவின் முரட்டு ரொட்டியையே புசிப்பார்கள். ஆடைகளிலும் சர்வ சாதாரணமானவற்றையே விரும்புவார் கள் ஆடம்பரமான ஆடைகளின்மீதும் ஆபரணங்களின் மீதும் அவர்களுக்கு எப்பொழுதும் விருப்பமிருந்ததில்லை. ஆனால் சன்னியாசி கோலத்தையும் விரும்பமாட்டார்கள். சாதாரண மான கரடுமுரடுள்ள கதர் துணிகளையே அணிந்திருப்பார்கள். சில சமயங்களில் அப்புப்போட்ட தைத்த துணிகளையும் அணிந்திருப்பார்கள். பெரும்பாலும் கம்பளித்துணிகளையே உடுத்தியிருப்பார்கள்.

ஆகவே இறுதியிலும் ஓர் அப்புப்போட்ட கம்பளித் துணியையே அணிந்திருந்தார்கள். ஒருநாள் உமர்(ரலி)அவர்கள் நபிபெருமானது தனியறையாகிய ஒரு மாடிமீது சென்று பார்த்தார்கள். அதுசமயம் அப்பெருமானது திருமேனிமீது ஒரே வஸ்திரந்தானிருந்துவந்தது. ஆங்கொரு வெறுங் கயிற்றுக்கட்டிலே கிடந்தது. பேரீச்சம்பட்டைத் தூள் திணித்த தோல் தலையணையொன்றும் காணப்பட்டது. ஒரு மூலையில் சிறிது சோளம் கிடந்தது. தரையில் ஒரு தோல் விரிக்கப்பட்டிருந்தது. சுவரில் தண்ணீர் துருத்தியொன்றும் மாட்டப்பட்டிருந்தது. இவற்றைக் கண்டவுடனே உமர் (ரலி) அவர்களுக்குக் கண்ணீர் வடிந்தோடிற்று. காரணம் என்னவென்று நபிபெருமான் விசாரித்தபோது, அவ்வறையிலுள்ள எளிய தன்மையையும் நபிபெருமான் திருமேனிமீது கட்டிற் கயிற்றின் தடிப்புகள் காணப்படுவதையும் கண்டவுடனே அழுகை வந்துவிட்டதென்று உமர் (ரலி) கூறினர். பாரஸீக மன்னரும் உரோமச் சக்ரவர்த்தியும் எத்துணையோ உயர்ந்த அந்தஸ்திலிருக்கும்போது ஆண்டகையின் நபியாகியவர்(ஸல்) இவ்வாறு கஷ்டப்படுவதேன்? என்றும் அந்தத் தோழர் வினவினர். அதுகேட்ட நபிபெருமான் (ஸல்) "ஓ உமர்! அவர்கள் இவ்வுலகினைப் பற்றிக்கொண்டிருக்குங்கால், நான் பரலோக வாழ்வைப் பற்றிக்கொண்டிருப்பதில் உமக்கொன்றும் விருப்பமில்லையா?" என்று கேட்டார்கள். தங்களுடைய இகலோக வாழ்க்கையானது குதிரைச்சவாரி செய்பவன் ஒரு மரநிழலில் தங்கிப் பிறகு புறப்பட்டுச் செல்லும் கதையை ஒத்திருக்குங்கால் தங்களுக்கேன் வசதியுள்ள படுக்கையென்றும் வினவுவார்கள். பெருமானவர்கள் பிரயாணம் செய்யவேண்டியிருந்தால் கால்நடையாகவும் குதிரை, ஒட்டகை, கோவேறு

கழுதை இவைகளின்மீதும் செல்வார்கள். குதிரை சவாரி செய்வதில் அவர்களுக்கு அதிகப் பிரியம். பெருமானவர்கள் ஒருவரையும் கோபித்து பேசியிருப்பதில்லை. அப்படி எதற்காகச் செய்தாய்? இப்படி ஏன்? செய்யவில்லை என்றுகூட சொன்னதில்லை. உஹது சண்டையின்போது நபிகளின் (ஸல்) பற்கள் முறிந்து வருத்தமாயிருந்த சமயத்தில் நபிகளின் தோழர்களில் சிலர் எதிரிகளை சபிக்கும்படி வேண்ட, அதற்கு நபிபிரான் நான் சபிப்பதற்காக அனுப்பப்படவில்லை நன்மையின் பக்கம் அழைப்பதற்காகவும் கிருபையாளனுகவும் அனுப்பப்பட்டிருக்கிறேன், என்று சொல்லிவிட்டு ஆண்டவனே! அவர்களை நேர்வழியிலாக்கிவை என்று பிரார்த்தித்தார்கள். பலதடவைகளில் பெருமானவர்கள் தங்களை கொலை செய்ய வந்தவர்களை மன்னித்து இருக்கிருர்கள். மக்கா ஜெயத்தின்போது 80 பேர்கள் ஒன்றுசேர்ந்து நபியவர்களை கொல்லுவதற்காக அவர்கள் தங்கியிருக்கும் கூடாரத்திற்கு சமீபமாக வந்தார்கள். அவர்களை நபிகளின் (ஸல்) தோழர்கள் பிடித்து பெருமானவர்கள் சமுகத்தில் கொண்டுபோய் நிறுத்திஞர்கள். வந்தவர்கள் கொல்லுவதற்காக வந்ததாய் ஒப்புக்கொண்டும் அவர்களை விடுதலைசெய்யும்படி உத்தரவிட்டார்கள்.

மற்ருெரு சமயம் சண்டையிலிருந்து திரும்பி வரும்போது நபிகள் பிரான் தங்கள் வாளை ஒரு மரக்கிளையில் தொங்கவிட்டு மரத்தடியில் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அதை பகைவர்களில் ஒருவன் கண்டு அங்கு வந்து அவ்வாளை தன் கையிலெடுத்துக்கொண்டான். உடனே பெருமானவர்கள் விழித்ததும் உருவிய வாளுடன் தலைப்பக்கத்தில் ஒருவன் நிற்பதைக் கண்டார்கள். அவன் அவர்களை நோக்கி ஏ முஹம்மத்! இப்பொழுது என் கையிலிருந்து உம்மை யார்

தப்புவிக்க முடியும்? என்று உரத்துக் கேட்டான். உடனே நபி(ஸல்)அவர்கள் ஆண்டவன் காப்பாற்றுவான் என்றுசொன் ஞர்கள். அவர்கள் திருவாயிலிருந்து வந்த மொழியைக் கேட்டதும் அவன் சரீரம் நடுங்கி மெய் மறந்துவிட்டான். அவன் கை பிடியிலிருந்த வாள் நழுவிற்று. அதை நபிகள் பிரான்(ஸல்)எடுத்துக்கொண்டு இப்போதுஉன்னைக்காப்பாற்று வது யார்! என்று கேட்டார்கள். ஒருவருமில்லையே என கெஞ்சினான். அவனை மன்னித்து அனுப்பிவிட்டார்கள். ஒரு சமயம் நபிகள் பிரான் (ஸல்)வீட்டிலிருக்கும்போது ஒரு யூதர் விருந்தாக வந்தார். நபிகள் பெருமான் (ஸல்)அவருக்கு நல்ல விருந்து கொடுத்து இரவு தன் படுக்கையில் சயனிக்கச் செய்து தனது கம்பளியையும் போர்த்திக்கொள்ளக் கொடுத் தார்கள். காலையில் நபிகள் பெருமான் அவருடைய அறை யைப் போய் பார்க்க நபரைக் காணவில்லை. மேலும் அறை முழுவதும் கம்பளியிலும் மலங்கழித்து இருந்தது. நபிகள் பெருமான் அதை அப்புறப்படுத்தி சுத்தம் செய்துகொண் டிருந்தார்கள். அப்பொழுது அந்த யூதர் தான் மறதியாக வைத்துச் சென்ற வாளை எடுப்பதற்காக திரும்ப வந்து சேர்ந் தார். தான் கழித்த மலத்தை நபிகள் பிரான்(ஸல்)சுத்தம் செய் வதைக் கண்டு திக்பிரமை அடைந்து விட்டார். வந்தவரை நபிகள் விஷயம் விஜாரித்து வாளை எடுத்துக் கொடுத்தார்கள். இத்தயாளத்தைக் கண்ட அவர் உடனே இஸ்லாத்தை தழுவினார்.

பெருமானவர்களின் குமாரத்தி ஸைனப் (ரலி) அவர் களைக் கொன்ற ஹப்பாரையும் நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தை ஹம்ஜா (ரலி) அவர்களைக் கொன்ற வஹ்ஷியையும் பெருமானார் மன்னித்துவிட்டார்கள்.

ஒரு சமயம் பெருமானாரின் வீட்டில் இரவு சாப்பாட்டிற்காக கொஞ்சம் ஆட்டின் பால்மட்டும் இருந்தது. அன்று ஒருவர் விருந்தாக வந்துவிட்டார். அவருக்கு அப்பாலெகொடுத்துவிட்டு அன்றிரவு வீட்டில் எல்லோரும் பட்டினியாயிருந்தார்கள். ஒரு சமயம் பெருமானார் மேலாடையில்லாமலிருப்பதை கண்ட மாது ஒருவர், அணிந்துகொள்ளும்படி மேலாடை ஒன்றுகொடுத்தார். கொஞ்ச நேரத்திற்குள் அவ்விடம் வந்த தோழர் ஒருவர், இந்த ஆடை நன்றாகயிருக்கிறதே! என்று சொன்னார். நபி(ஸல்)அவர்கள் அதைஅவருக்கு கொடுத்துவிட்டார்கள். அதை வாங்கி வெளியில் வரும்போது வெளியிலிருந்த ஜனங்கள் அவரிடம் நபிபெருமானவர்களுக்கு மேலாடை அவசியம் என்பதும் யார் கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் கொடுத்துவிடுவார்கள் என்பதும் உமக்குத்தெரிந்திருந்தும் ஏன் வாங்கினீர் என்று கண்டித்தார்கள்.

ஒரு சமயம் நபிகள் நாயகம் ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கும்போது ஒரு யூதனுடைய பிரேதம் வருவதைக்கண்டு எழுந்து நின்றார்கள். அருகிலிருந்தவர்கள் இது ஒரு யூதனுடைய பிரேதம் என்று சொல்ல நபியவர்கள் அதுவும் ஒரு ஆத்மாவை சுமந்தது அல்லவோ? என்று மறுமொழி சொன்னார்கள்.

ஒருவர் நபி(ஸல்)அவர்களிடம் வந்து ஆண்டவனின் தூதரே! அடிமைகள் குற்றம் செய்தால் அவர்களை எத்தனைதடவை மன்னிக்கவேண்டும் என்று கேட்டார். நபிகள்பிரான் (ஸல்) மௌனமாயிருந்தார்கள். மறுமுறை கேட்டதற்கும் மௌனமாயிருந்தார்கள். மூன்றாவதுமுறை கேட்கும்போது ஒவ்வொருநாளும் 70 தடவை மன்னிக்கவேண்டும் என்று சொன்னார்கள்:—

யூதர்களின் பிரதேசத்திற்கு மகசூலுக்காக அப்துல்லாவென்பவர் சென்றிருந்தார். அவரை ஒருவன் கொலை செய்துவிட்டான். அவருடன் சென்றிருந்த அவருடைய சிறிய பிதாவின் குமாரன் மஹீஸத் என்பவர் நபிபிரானிடம் வந்து யூதர்கள் அப்துல்லாவை கொலைசெய்துவிட்டதாகச் சொன்னார். யூதர்கள் கொன்றார்களென்று நீர் சத்தியம் செய்யக்கூடுமா? என்று கேட்க, அவர் வெட்டப்பட்டதை நான் கண்ணால் பார்க்கவில்லை என்று சொன்னார். அப்படியானால் யூதர்களை சத்தியம் செய்யச் சொல்லலாமா! என்று வினவ, யூதர்கள் சத்தியம் நம்பமுடியாதது என்றார்.

யூதர்கள் நிறைந்த பிரதேசத்தில் செய்யப்பட்ட கொலைக்கு அவர்களைத் தவிற வேறு பொறுப்பாளி ஒருவருமில்லை என்று தெரிந்தும் போதிய சாக்ஷியமில்லாததால் புகார் தள்ளப்பட்டுவிட்டது.

நபிபெருமானின் புத்திரி பாத்திமா நாயகி அவர்கள் தகப்பனாரிடம் தனக்கு வேலைக்கஷ்டம் அதிகமென்றும் ஒரு சிறுமி வேண்டுமென்றும் விண்ணப்பித்தார்கள். அவர்கள் கஷ்டத்தை உணர்ந்திருந்தாலும் நபிகள்பிரான் = நமக்குவேண்டாம் அடிமை சிறுமிகளுக்கு அதிகம் தேவையிருக்கிறதென்று கூறிவிட்டார்கள். ஹுதைபிய்யா உடன்படிக்கைக்கு முன்னால் ஸைத் என்ற ஒரு முஸ்லிமை காபிர்கள் துன்பப்படுத்தி வெட்டுவதற்காக நிறுத்திக்கொண்டு அவரை நோக்கி,

இந்நேரத்தில் உமக்கு பதிலாக முஹம்மதை (ஸல்) வெட்டுவதாயிருந்தால் அதை உம்முடைய நல்ல அதிருஷ்டமாக கருதமாட்டீரா? உண்மையை சொல்லும் என்று வினவியபோது,

உடனே ஸைத், பெருமானவர்களின் பாதங்களில் முள் தைப்பதனால் என்னுடைய உயிர் இரட்சிக்கப்படுமென்று இருந்தாலும் அவர்கள் பாதங்களில் முள் தைப்பதைவிட, என் உயிரை பலிகொடுக்கவே முழு மனத்துடன் சித்தமாக இருக்கிறேனென்பதை ஆண்டவன் சத்தியமாக சொல்லுகிறேன்" என்று கூறினர்.

தபூக் சண்டையின்போது (ரோம் அரசர் மதீனவைப் பிடிப்பதற்காக வந்து தபூக் என்ற இடத்தில் நடத்திய சண்டை) செலவிற்காக பொருள் வேண்டுமென நாயகம் (ஸல்) கேட்டவுடன் தோழர்கள் எல்லோரும் தத்தம் தகுதிக்கு அதிகமாக பொருள் கொடுத்து உதவினர். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) தங்கள் செல்வமனைத்தையும் கொடுத்துவிட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தங்கள் சொத்தில் பாதியை கொடுத்துவிட்டார்கள். குடும்பத்தார்களுக்காக ஏதேனும் வைத்திருக்கிறீர்களாவென்று நாயகம் அபூபக்கர் அவர்களைக் கேட்க, ஆண்டவனும் அவனதுதூதரும் என் குடும்பத்தாருக்குப் போதும் என்று பதிலிறுத்தார்கள்.

அரேபியாவின் ஏக மன்னராய் விளங்கிய அஹ்மதுர்ரசூல் (ஸல்) அவர்கள் உலகம் முழுமைக்கும் எக்காலத்திற்கும் தீர்க்கதரிசியாக (நபியாக) அவதரித்துள்ளார்கள். உலகில் இவர்களுக்குமுன் தோன்றிய எல்லா நபிமார்களும் ஒவ்வொரு வகுப்பாருக்கு மட்டும் நபியாக வந்து தங்கள் தூது முற்றுப் பெருமலே மறைந்து விட்டார்கள். ஆனல் நபிகள் பிரானே தங்கள் தூதில் முற்ற முற்ற ஜயமடைந்து இஸ்லாத்தை உலகில் ஸ்திரமாய் நிலை நாட்டிச் சென்றுர்கள். இதைப்பற்றி ஆல்பிரட் மார்ட்டின் என்ற கிறிஸ்தவ அறிஞர் எழுதியிருப்பதாவது: 'அரப் நாட்டின் ஆசாரங்களனைத்தையும்

இதுபோதுள்ள நிலைமைக்கு உயர்த்திக்கொண்டு வரும் விஷயத்தில் முஹம்மத் (ஸல்) தம்முடைய நாட்டங்களை எல்லாம் உபயோகித்திருப்பதைப் பார்க்கினும் உன்னதமான தோற்றம் ஒன்றினையும் மத சம்பந்தமான சரித்திரங்களில் கண்டுகொள்ள மாட்டோம். அவருடைய நாட்களில் அவருடைய நாட்டிலே வசித்துவந்த மக்களின் உயிர் வாழ்க்கையை ஓர் உயரிய உன்னதத்திற்கு எழுப்பிக் கொணர்ந்ததில் அவர் அம் மத்தியகால அரப் தேசத்தின் யூத மதமேனும் கிறிஸ்துவ மதமேனும் சாதித்திருக்கமுடியாத வெற்றியையே சாதித்திருக்கிறார் என்றே அவருக்கு என்றென்றும் கியாதி உண்டாகக் கூடிய முறையிலேயே கூறியமைதல் வேண்டும். இம்மட்டுமோ! முஹம்மத் (ஸல்) செய்துவைத்த அந்த நாகரிக முதிர்ச்சியின் பயனாக அவர் அரப் நாட்டுக்கு மட்டுமல்லாது எல்லா உலகுக்குமே ஒரு விலைமதிக்க ஒண்ணாத ஊழியத்தை புரிந்திருக்கிறார்."

நபிகள் பிரானின் (ஸல்) வாழ்க்கையானது, ஒவ்வொரு துறையிலும், எல்லோரும் பின்பற்றத்தக்கதாகவே அமைந்திருக்கின்றது. அவர்கள் ஒரு குடும்பத்திற்குத் தலைவராகவும் அதே காலத்தில் தவஞ் செய்யும் ஞானியாகவும், வியாபாரியாகவும், மதபோதகராகவும், ராஜ்யத்தின் அதிபதியாகவும், அதே நேரத்தில் ஏழைகளின் பிராணசி நேகிதராகவும், படைக்களத்தின் தளபதியாகவும், நியாயாதிபதியாகவும், தருமவானாகவும், நடந்து காட்டியிருக்கிறார்கள். தாங்கள் அனுஷ்டிக்காத எக்கருமத்தையும், அவர்கள் மன்பதைக்கு போதித்ததில்லை.

இவ்வாறு தங்கள் தூதில் வாகை மலைசூடிய நபிகள் பிரான் முஹம்மத் முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்கள், மதீனமா

நகர் திரும்பி, அதிக நாள் ஜீவித்திருக்கவில்லை. சில மாதங்கள் கழிந்ததும், ஜுரத்தால் தாக்கப்பட்டு, ஹிஜ்ரி 11-வது ஆண்டு ரபீயுல் அவ்வல் மாதம் 12உ (கி. பி. 632 ஜூன் மாதம் 8உ) அன்று, அம்மாசில்லா புனிதரவர்கள் தங்கள் 63-வது வயதில் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகமடைந்தார்கள்.

இன்னாலில்லாஹி,வஇன்னா இலைஹி ராஜிஊன்(நிச்சயமாக நாம். அல்லாஹ்வின் அடியார்களாயிருக்கிறோம். ஆதலின் நாம் அவனிடமே நிச்சயமாக மீளுவோம்.)

"ஞான வாரிதியை, நபிகளுக்கரசை,
நானில மேல் சுவடுறாத
வானமாமணியை, இருநிதித்தருவை,
மாபுகட்கொரு தனிச்சுடரை
மோன மாதவர்கள், தொழு நவமணியை
மூவுலகனைத்துமோருலகில்
கோனியல் புரிய, வரும் முஹம்மதுவை
குணமுடனென்று காண்குவனே.

(முதுமொழி மாலை)

தந்தை தாயிழந்த தனயராய், குடும்பத்
தலைவராய், வணிகராய், தவராய்,
நந்திடாச் சமயக்குரவராய், தரும
நாதராய், நரபதி ராஜ்ய,
தந்திரி, யறப்போர் தளபதியெனினுந்
தாசர்க்குந்தாச ராயினையில்,
அந்திய நபியாய், அஹ்மதர் அவனிக்
களித்துள்ள ஞானமே ஞானம்.

(மதுரை ம.கா.மு.)

ரூஹிபிதாக்க யாரசூலுல்லா!

எங்கள் ரக்ஷகனே!

எங்கள் பாபங்களையும் எங்கள் முன்னோர்களின் பாபங்களையும் பொறுத்து எங்களை நேரான வழியிலும் முயற்சிக்குரிய வழியிலும் நடத்திவைப்பாயாக. எங்கள் ஹிருதயங்களை வழி தவறச்செய்யாதிருப்பாயாக.

எங்கள் ஆண்டவனே!

எங்கள் நபி முஹம்மத் முஸ்தபா ரசூல் சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பொருட்டினால் எங்களுக்கு ஈடேற்றம் தந்தருள்வாயாக. பாபங்களை மன்னிப்பவனும் கருணையுள்ளவனும் நேர்வழி காட்டுபவனும் நீயாகவே இருக்கிறாய். ஆமீன்.

அய்யனார் பிரஸ், கிர். 20, எம்பார் தெரு, தூத்துக்குடி.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 1 | 16 | இவ்வனி | இவ்வவனி |
| 5 | 1 | தீர்த்க | தீர்க்கத் |
| 6 | 8 | ஒன்றன | ஒன்றென |
| 8 | 19 | பேரரனந்த | பேரானந்த |
| 20 | 2 | கொல்லப்பட்னர் | கொல்லப்பட்டனர் |
| 24 | 5 | வெனியான | வெளியான |
| 29 | 9 | ஆரம்பத்திலேயே தோண்டி | ஆரம்பத்திலேயே அவர்கள் தோண்டி |
| 30 | 25 | எண்ணிணார்களாயினும் | எண்ணிணார்களாயினும் |
| 45 | 10 | நபியெருமானை | நபிபெருமானை |
| 45 | 25 | அல்லாஹ்கே | அல்லாஹ்வுக்கே |
| 51 | 2 | அத்கைய | அத்தகைய |
| 57 | 25 | சன்மார்க்மாக | சன்மார்க்கமாக |
| 58 | 23 | வேன்மை | மேன்மை |
| 60 | 25 | காபிக்களாலும் | காபிர்களாலும் |
| 62 | 16 | புத்திரனிடத்லிருந்தும் | புத்திரனிடத்திலிருந்தும் |
| 70 | 26 | வாகைமலை | வாகைமாலை |

உங்களுடைய தோற்றங்களையும், உங்களுடைய உடைமைகளையும், ஆண்டவன் கவனிக்கமாட்டான். ஆனால், உங்களுடைய ஹிருதயங்களையும், உங்களுடைய செய்கைகளையுமே அவன் கவனிக்கிறான்.

எந்த வஸ்துவை அளப்பதாகயிருந்தாலும் நிறைய அளந்துகொடுங்கள். எதை நிறுப்பதாகயிருந்தாலும் தராசு முனை நேராக இருக்கும்படி நிறுத்துக்கொடுங்கள்.

ஆறு காரியங்களுக்கு நீங்கள் பொறுப்பாளிகளாயிருந்தால் நான் உங்களுக்கு, சொர்க்கத்திற்கு, பொறுப்பாளியாயிருப்பேன்.

அவையாவன:—

1. பேசுவதானால் உண்மையே பேசுங்கள்.
2. வாக்குச் செய்தால் அதை நிறைவேற்றுங்கள்.
3. உங்களிடம் அமானத் (நம்பி ஒப்புவிக்கப்பட்ட பொருள்) வைக்கப்பட்டால் அதைக்காப்பாற்றிக் கொடுங்கள்.
4. உங்கள் மறைவு வ்ஸ்தலங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
5. உங்கள் பார்வைகளை, கீழ்நோக்கியே வையுங்கள்.
6. நியாயமில்லாத செய்கைகளை விட்டும் உங்கள் கைகளை தடுத்துக்கொள்ளுங்கள்.

ஹதீஸ் (நாயக வாக்கியம்)